204

# NEW TAMIL READER

## FOURTH STANDARD

BY
C. R. NAMASIVAYA MUDALIAR
*Tamil Pandit, College for Women, Madras*

15 JUL '18
MADRAS

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1918

[Price 5 As.

TB
P31,J9(4)
N18
83395

# நூதன
# நான்காம் வாசக
# புஸ்தகம்

நூதன

# நான்காம் வாசக புஸ்தகம்

மேரி மகாராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது] 1918 [விலை 5 அணா



## NATIONAL ANTHEM

God save our gracious King
Long live our noble King
God save the King.

Send him victorious
Happy and glorious
Long to reign over us
God save the King.

காத்தருள் தேவ எம்
காருண்ய ராஜனைக்
காத்தருள்க

ஆயுரா ரோக்கியமும்
ஆட்சியும் வெற்றியும்
ஆண்மைநற் கீர்த்தியும்
அருள் செய்க.

# பொருளடக்கம்

## வாசக பாடங்கள்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பூனை இனம் — I | 1 |
| 2. | பூனை இனம் — II | 6 |
| 3. | பூனை இனம் — III | 10 |
| 4. | தண்ணீரின் மூன்று தன்மைகள் | 14 |
| 5. | தந்தை தாய்ப் பேண் | 18 |
| 6. | தண்டும் அடிமரமும் | 23 |
| 7. | துஷ்ட பந்துக்கள் | 26 |
| 8. | நாயினம் — I | 30 |
| 9. | நாயினம் — II | 35 |
| 10. | வெறுப்பு விருப்பானது — I | 38 |
| 11. | வெறுப்பு விருப்பானது — II | 44 |
| 12. | தபால் | 48 |
| 13. | பட்சிகளின் அலகுகள் | 51 |
| 14. | நீர்ப்பாசனம் | 58 |
| 15. | கொசுகு | 62 |
| 16. | சூடு பெருகச் செய்யும் குளிர்ச்சி இறுகச் செய்யும் | 65 |
| 17. | ஐக்கியக் கொடி (யூனியன் ஜாக்) | 71 |
| 18. | சிபாரிசு இல்லாத சிறுவன் | 74 |
| 19. | இலைகள் | 78 |
| 20. | குற்றத்தை ஒப்புக்கொண்ட குணவான் | 82 |
| 21. | பொறிகளும் புலன்களும் | 86 |
| 22. | பூ காய் பழம் | 92 |


## செய்யுட் பாடங்கள்


| | | |
|---|---|---|
| 23. | பறவையும் பையனும் | 95 |
| 24. | காகம் பாம்பைக் கொன்றது | 96 |
| 25. | அன்னை தன் அன்பு | 97 |
| 26. | மானிட வாழ்க்கை | 98 |
| 27. | வாக்குண்டாம் | 100 |
| 28. | நல்வழி | 103 |
| 29. | நீதி வெண்பா | 104 |

PRINTED AT
THE 'CAXTON PRESS',
MADRAS, E.

நூதன

# நான்காம் வாசக புஸ்தகம்

## 1. பூனை இனம் - I

கண்ணப்பன் என்னும் சிறுவன் மூன்றும் வகுப்பில் தேறி, நான்காம் வகுப்புக்குப் போனுன். உடனே அவனுக்கு வெய்யிற் கால விடுமுறை கிடைத்தது. அவனது தகப்பனுர் கண்ணப்பனைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டு போனுர். அவர் சென்னையில் சிறந்த காட்சிகள் பலவற்றை அவனுக்குக் காட்டினுர். ஒரு நாள் காட்டு மிருகங்களைக் காட்டப் பீபில்ஸ் பார்க் என்னும் தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டு போனுர். அங்கே அவர்கள் இருவரும் தலைக்கு அரையணு கொடுத்து மிருகாசயத்துக்குள் சென்றுர்கள்.

'கண்ணப்பா! இங்கே இருக்கிற ஜந்துக்களை எல்லாம் கவனித்துப் பார். சில மிருகங்களை இரும்புக் கிராதி போட்ட கூட்டில் அடைத்து வைத்து இருக்கிறுர்கள்; சில மிருகங்களை வெளி இடங்களில் யதேச்சையாகத் திரியும்படி விட்டிருக்கிறுர்கள்.

'கண்ணப்பா! இங்கே வா, இந்தக் கூட்டில் இருக்கும் மிருகங்களைப் பார். இந்த மிருகங்களை நீ எங்கேயாவது பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டார் தகப்பனார்.



'அப்பா! நான் இதை உயிரோடு பார்த்ததில்லை; படத்தில் பார்த்திருக்கிறேன். எங்கள் உபாத்தியாயர் சிங்கத்தைப்பற்றி ஒருநாள் ஒரு கதை சொன்னார். அப்போது இதன் படத்தைக் காட்டி யிருக்கிறார்' என்றான் கண்ணப்பன்.

'ஆமாம், இது சிங்கந்தான் : இங்கே இரண்டு சிங்கங்கள் இருக்கின்றன. இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா ? பார்' என்று கேட்டார் தகப்பனார்.

'அப்பா ! ஒன்று நின்றுகொண்டு இருக்கிறது ; மற்றொன்று படுத்துக்கொண்டு இருக்கிறது. நின்றுகொண்டிருப்பது படுத்துக்கொண்டிருப்பதைவிடக் கொஞ்சம் பெரியது. நின்றிருக்கும் சிங்கத்திற்குக் கழுத்தைச் சுற்றிலும் மயிர் அடர்த்தியாக நீண்டு தொங்குகிறது. படுத்திருக்கும் சிங்கத்திற்குக் கழுத்தண்டை மயிர் இல்லை' என்றான் கண்ணப்பன்.

'கண்ணப்பா ! நீ புத்திசாலி, நன்றாய்க் கவனித்துப் பதில் கூறினாய். இவைகளில் நின்றிருப்பது ஆண் சிங்கம் ; படுத்திருப்பது பெண் சிங்கம். சிங்கத்தில் இது ஆண் என்றும் இது பெண் என்றும் எப்படித் தெரிந்துகொள்வது ? சொல் பார்க்கலாம்' என்றார் தகப்பனார்.

'ஓ எனக்குத் தெரியும், கழுத்து மயிர் இருந்தால் ஆண் சிங்கம், கழுத்து மயிர் இல்லாவிட்டால் பெண் சிங்கம்' என்றான் கண்ணப்பன்.

'சரிதான், கழுத்து மயிர் என்று சொல்கிறாயே, அதற்குப் 'பிடரி மயிர்' என்று பெயர். இந்தப் பிடரி மயிர், சிங்கம் குட்டியாய் இருக்கும்போது இராது. சிறு பிள்ளைகளுக்கு மீசை மயிர் இருக்கிறதா — இல்லையே, அப்படித்தான் இதுவும்' என்றார் தகப்பனார்.

'ஆமாம், சரிதான், சரிதான்,' என்று சொல்லி நகைத்தான் கண்ணப்பன்.

இருவரும் இப்படிப் பேசிக்கொண்டு இருக்கை-யில் ஒருவன் ஆட்டுத் தொடைகள் இரண்டு கொண்டு வந்து அந்தக் கூட்டுக்குள் போட்டான். சிங்கங்கள் பாய்ந்து, ஒவ்வொன்றும் ஒரு தொடையைப் பற்றிக் கொண்டு தின்ன ஆரம்பித்தது. அப்போது தகப்பனார் பிள்ளையைப் பார்த்து,

'கண்ணப்பா! சிங்கம் இரை தின்பதைப் பார்; எதைப்போல் தின்கிறது? சொல் பார்க்கலாம்' என்று கேட்டார்.

'ஆம், அப்பா! சிங்கம் பூனையைப் போலவே இரையைத் தின்கிறது. உள்ளே சுருங்கி யிருந்த நகங்களை நீட்டி, மாமிசத்தை நன்றாய்ப் பிடித்துக் கிழிக்கிறது. இதன் பற்களும் பூனைக்கு இருப்பது போலவே இருக்கின்றன. எலும்பிலுள்ள ஊனை நாக்கினால் நக்கி நன்றாய் எடுத்து விடுகிறது. இதுவும் பூனைதானோ?' என்று கேட்டான் கண்ணப்பன்.

சிங்கம் பூனை அன்று; இது பூனை இனத்தைச் சேர்ந்தது. பூனை இனத்தைச் சேர்ந்த மிருகங்கள் இன்னும் பல உண்டு. அவற்றை யெல்லாம் பிறகு உனக்குக் காட்டுகிறேன். முன்பு சிங்கத்தின் உறுப்புகளையும் செய்கைகளையும் நன்றாய்க் கவனித்துத் தெரிந்துகொள்.

'சிங்கத்தைப் பார்த்தால் மிகவும் பெரியதோர் பூனைபோல் இருக்கிறது. சிங்கம் ஒருவிதமான மங்கின மஞ்சள் நிறமுள்ளது. சிங்கம் சாதாரணமாக அது வசிக்கும் காட்டிலுள்ள மண்ணின் நிறம் போல் இருக்கும். கண்களிலுள்ள கரு விழிகளும், பூனைக்கு இருப்பதுபோலவே, பகலில் ஒடுங்கியும்

இரவில் அகன்றும் இருக்கும். கண்கள் இரவில் அக்கினி கோளங்கள்போல் ஜொலிக்கும். சிங்கம் இரவில் தான் நன்றாய்ப் பார்க்கும். பூனை இரவில் தன் இரைகளைத் தேடுவது போலவே, அதன் இனத்தைச் சேர்ந்த மிருகங்களும் இரவில்தான் இரை தேடுகின்றன. சிங்கம் அதிக பலமுள்ளது. ஒரு மாட்டை வாயினுற் கௌவி, முதுகின்மேல் போட்டுக்கொண்டு, சுமார் 20 அடி அகலமுள்ள வாய்க்காலைத் தட்டாமல் தாண்டி ஓடும்.

'சிங்கம், தான் வேட்டையாடிக் கொன்ற இரையையே தின்னும். பிராணிகளை அநாவசியமாகச் சிங்கம் கொல்வதில்லை. சிங்கம் இரவில் கர்ஜிக்கும். அது, சிங்கம் பசியாறிச் சந்தோஷமாக இருப்பதற்கு அறிகுறியாகும். அதன் கர்ஜனை சுமார் 3 மைல் தூரம் கேட்கும். சிங்கம் பூனையைப் போல் எல்லாம் செய்யும்; மரம் ஏற மட்டும் அதற்குத் தெரியாது.

'வட இந்தியாவில் சிந்து, கூர்ஜர முதலிய தேசங்களிலும், ஆப்பிரிக்காவின் அகன்ற வனங்களிலும், பெர்ஷியாவின் பெரிய காடுகளிலும் சிங்கங்கள் உண்டு.

## 2. பூனை இனம் - II.

### புலி

'குழந்தாய்! இந்தக் கூட்டில் இருப்பதைப் பார்; இதுவும் பூனை இனத்தைச் சார்ந்ததே. இதற்கும் சிங்கத்திற்கும் என்ன பேதம்? சொல் பார்ப்போம்' என்றார் தகப்பனார்.



'அப்பா! சிங்கத்திற்கும் இதற்கும் அதிக பேதம் இருக்கிறது. சிங்கத்திற்கு இருப்பதுபோல் இதற்குப் பிடரி மயிரும் வாலில் குஞ்சமும் இல்லை. சிங்கத்திற்கு இல்லாத கரிய கோடுகள் புலியின் உடலில்

காண்கின்றன. புலியைப்பற்றி மூன்றும் வகுப்பில்-கூட வாசித்திருக்கிறேன். அது செடிகளின் நடுவில் படுத்திருந்தால், பிறருக்குத் தெரியாம லிருக்கும்படி இந்தக் கோடுகள் அமைந் திருக்கின்றனவாம். புலி நீர்நிலைகளுக்கு அருகில் ஒளித் திருந்து, தண்ணீர் குடிக்க வரும் மாடு, மான் முதலிய மிருகங்களைப் பிடித்துக் கொன்று தின்னுமாம். அப்பா! இன்னொரு சங்கதியும் எனக்குத் தெரியும். சிங்கம் பசி எடுத்தால்தான் பிராணிகளைக் கொல்லும்; புலியோ, தன் கண்ணில் கண்டதை எல்லாம் கொன்று களிப்படையும். புலி இரத்தப் பிரியமுள்ள ஜந்து. புலி, தான் கொன்ற ஜந்துவை கௌவிக்கொண்டு போய், தன் குகையில் வைத்துக் கொண்டு, நாலைந்து நாள் வரையில் தின்னுமாம்' என்றான் கண்ணப்பன்.

'ஆமாம், புலியைப்பற்றி உனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. நானும் கொஞ்சம் சொல்லுகிறேன் கேள்: சில புலிகள் மனிதரையும் கொன்று தின்னப் பிரியப்படும். ஏன் தெரியுமா? கிழப் புலிகள்தான் மனிதரைக் கொல்லப் பிரியப்படும். புலிக்குக் கிழத்தனம் வந்துவிட்டால், மிருகங்களைக் கொல்ல முடிவதில்லை. அதனால், காடுகளுக்கு அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து, மனிதரைக் கொல்லத் தலைப்படும். ஒரு முறை ருசி கண்டால், பிறகு அது மனிதரைக் கொல்லவே மனங்கொண்டு திரியும்.

'சிங்கத்தைப் போலவே புலிக்கும் மரம் ஏறத் தெரியாது. "பூனை, புலிக்கு எல்லாம் கற்றுக் கொடுத்தது, மரம் ஏற மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை" என்று மனிதர் சொல்வது வழக்கம்.

## சிறுத்தை

'சிறுத்தையும் பூனை இனத்தைச் சேர்ந்ததே. இதற்குப் புள்ளிப் பூனை யென்றும் பெயர். சிறுத்தையில் இரண்டு வகையுண்டு. ஒன்றுக்கு மஞ்சள் நிறத்தில் கரும்புள்ளி கலந்திருக்கும். மற்றொன்றுக்கு உடல் முழுவதும் கருமையாகவே இருக்கும். உற்றுக் கவனித்தால் கருமையிலும் கருமையான புள்ளிகள் இதன் உடலில் காணப்படும். சிறுத்தை



அதிக கொடூர குணமுள்ளது. இது காட்டிலுள்ள சிறிய விலங்குகளை வேட்டையாடித் தின்னும். சில சமயங்களில் ஊர்களில் புகுந்து கோழி, வாத்து முதலிய ஜந்துக்களைப் பிடித்துத் தின்னும். ஏமாந்திருந்தால் இது குழந்தைகளையும் அடித்துக் கொண்டு போய்விடும்.

## வேட்டைச் சிவிங்கி

'வேட்டை யாடுவதில் மிகவும் திறமையுடையது, ஆதலால் இதற்கு வேட்டைச் சிவிங்கி என்று பெயர்.

இதைச் சீட்டா என்றும் சொல்வதுண்டு. பார்வைக்கு இது சிறுத்தையைப் போலவே இருக்கும். ஆனால் இதற்கு உள்ள தாடி மயிர் சிறுத்தைக்குக் கிடையாது. இதுவேயன்றி இன்னொரு வித்தியாசமும் உண்டு. சிங்கம், புலி, சிறுத்தை ஆகிய மூன்று மிருகங்களுக்கும், பூனையைப் போல், நகங்களை வேண்டியபோது வெளியே நீட்டவும் வேண்டாதபோது அவற்றை உள்ளே இழுத்துக்கொள்ளவும் கூடும்.



சிவிங்கி அப்படிச் செய்ய முடியாது. சிவிங்கிக்குக் கால்கள் சிறுத்திருப்பதனால் அது வெகு வேகமாக ஓட வல்லது. அதனால், வேட்டையில் விருப்பமுள்ள வேந்தர்கள் சிவிங்கிகளைப் பழக்கி, வேட்டை நாய்களுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள்.

## 3. பூனை இனம் - III

### கழுதைப் புலி

'இது உயரத்திலும் நிறத்திலும் கழுதையை ஒத்திருப்பதுமன்றி, புலியைப்போல் உடலில் கரிய கோடுகளைக் கொண் டிருப்பதனுல் இதற்குக் கழுதைப் புலி என்பது பெயராயிற்று. இதற்கு முன் கால்களைவிடப் பின்கால்கள் குறுகியவை. இது நடப்பதைப் பார்த்தால் கால் முடமான கூனன் நடப்பது போல் இருக்கும். இது நேரே நடவாமல் சுழன்று



சுழன்று போகும். கழுதைப் புலி நேரே ஓடி இரையைப் பிடித்துத் தின்ன முடியாது. ஆகையால், அது சிங்கம் புலி முதலிய ராஜ மிருகங்களின் பின்னே சென்று, அவை தின்று மிகுந்தவற்றைப் புசித்துத் திருப்தி யடையும். இதன் கடைவாய்ப் பற்கள் மிகவும் பலமானவை. அந்தப் பற்களால் எலும்புகளை வெகு சுலபமாக நொறுக்கித் தின்றுவிடும். அது கூச்சலிடுவதைக் கேட்டால் மனிதர் சிரிப்பது-

போல் இருக்கும். காட்டில் பிரயாணம் செய்யும் மனிதர்கள் இதன் தொனியைக் கேட்டு மயங்கி, மனிதர்கள் சிரிக்கிறார்கள் என்று எண்ணி, இதன் அருகிற் போவார்கள். அப்போது கழுதைப் புலி அவர்களைக் கொன்று தின்றுவிடுமாம். இதுவும் ஒரு தந்திரந்தானே !

## கீரிப்பிள்ளை

'கீரிப்பிள்ளையும் பூனை இனத்திற் சேர்ந்ததே. இதற்கு உடல் நீண்டு, கால்கள் குறுகி இருக்கின்றன. உரோமம் தடித்து மெல்லிய ஊசிபோல் இருக்கிறது. பற்களைப் பார், பூனையின் பற்களைப் போலவே இருக்கின்றன. கீரிப்பிள்ளை தோட்டங்களிலும் புதல்களிலும் வசித்துக்கொண்டு, அங்கேயுள்ள எலி முதலியவற்றைப் பிடித்துத் தின்னும்.



வீட்டில் வளரும் கீரிப்பிள்ளை சாதம், பழம், அப்பம் முதலியவற்றைத் தின்னும், கீரிப்பிள்ளை பாம்பைக் கண்டால், அதைக் கடித்துக் கொன்று விடும். விஷப்பாம்பு கடித்தாலும் கீரிக்கு அபாயமில்லை என்று பலர் எண்ணுவதுண்டு; அது சரியன்று. பாம்பு கடித்தால் அது இறந்துவிடும். கீரி பாம்போடு சண்டை செய்யும்போது பாம்பு தன்னைக் கடிக்கும்படி அது இடந் தருவதில்லை. கீரி தந்திரமாக எகிறிக் குதிக்க வல்லது. அதனால் பாம்பு சோர்வடையும் சமயம் பார்த்து, கீரி அதைக் கழுத்தண்டை கடித்துக் கொன்று விடும். ஒரு சமயம் கீரியைப் பாம்பு

கடிக்க முயன்றாலும், கீரியின் ஊசிபோன்ற உரோமத்திலும் தடித்த தோலிலும் பாம்பின் பற்கள் பதிவதில்லை. இதை உணராமல், கீரி பாம்பைக் கடித்துவிட்டு, அதன் விஷம் தன் உடலில் பாயாதபடி ஓடிச்சென்று, ஒருவகைச் செடியைத் தின்கிறது என்று பலர் சொல்லுகிறார்கள்.

## மர நாய்

'நாயைப் பூனை இனத்தில் சேர்ந்ததென்று சொன்னால் நம்பலமா! உருவத்தில் இது நாயை ஒத்திருப்பதனாலும் இது மரம் ஏறுவதனாலும் இதை மரநாய் என்கிறோம். நாய் இனத்திற்கு மரம் ஏறத் தெரியாது. ஆகையால், இது பூனை இனத்திற் சேர்ந்-



ததே யாகும். மரநாயின் வாலைப் பார்; பந்தைப்போல் சுற்றி வைத்திருக்கிறது. இது பகலில் மரப் பொந்துகளில் தங்கி யிருந்து, இரவில் இரை தேடப் புறப்பட்டு, எலி, அணில், சிறு பறவை முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். ஒன்றும் அகப்படாவிட்டால்

கிராமங்களுக்கு அருகில் வந்து, தென்னை பனை முதலிய மரங்களில் ஏறி, அவற்றில் கட்டியிருக்கும் கள்ளைக் குடிக்கும். சில சமயங்களில் மயக்கம் தலைக்கேறி கீழே விழுந்து கிடக்கும். வீடுகளில் புகுந்து உணவுப் பொருள்களைத் திருடித் தின்பதும் உண்டு.

## புனுகு பூனை

'இதுதான் புனுகு பூனை. புனுகு என்பது ஒரு வகை வாசனைத் திரவியம் என்பது உனக்குத் தெரியுமே. அந்தப் புனுகு இந்தப் பூனையிடமிருந்தே உண்டாகின்றது. இது சாதாரண பூனையைக் காட்டிலும் சிறுத்து இருக்கிறது. இந்தப் பூனை இருக்கும் கூட்டைப் பார். நடுவில் ஒரு மூங்கில் கழி சுழலும்படி நாட்டப்பட்டு இருக்கிறது. பூனை தன் உடலின் பின்பாகத்தை அடிக்கடி இந்தக் கழியில் தேய்த்துக்கொள்ளும். ஏன் தெரியுமா? புனுகு பூனைக்கு வாலின் கீழ் இரண்டு தைலப் பைகள் உண்டு. அதில்



அடிக்கடி தைலம் ஊறும். பூனை அந்தத் தைலத்தை இந்தக் கழியில் தேய்த்து விடுகிறது. அந்தத் தைலந்தான் புனுகு. மனிதர் அதை வழித்து ஒரு பாத்திரத்தில் சேமித்து வைப்பார்கள். புனுகு பூனையும் காட்டு மிருகந்தான். மனிதர் அதைப் பிடித்து வந்து வளர்த்துப் பழக்கி, புனுகு சேகரிப்பது வழக்கம்.

### காட்டுப் பூனை

'வீட்டுப் பூனையைப்போல் காட்டுப் பூனையும் உண்டு. அது சாதாரண பூனையைவிட மிகவும் பெரியது. அது காட்டிலேயே வசித்துக்கொண்டு, சிறு பறவைகளையும் மிருகங்களையும் பிடித்துத் தின்னும். சில சமயங்களில் நாட்டில் புகுந்து கோழி, வாத்து முதலியவற்றைப் பிடித்துத் தின்னும்; அதைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கும்' என்று சொன்னார் தகப்பனார். கண்ணப்பன் அதைக் கேட்டு மிகவும் களிப்படைந்தான். பிறகு இருவரும் வீட்டுக்கு வந்தார்கள்.

## 4. தண்ணீரின் மூன்று தன்மைகள்

நமது உடலைக் கவனித்தால் தசை, நரம்பு, எலும்பு முதலிய பொருள்கள் கடினமாக இருக்கின்றன. உடம்புக்குள் எங்கும் பரவி யிருக்கும் இரத்தம் ஜலரூபமாக இருக்கிறது. உடலிலுள்ள எல்லா உறுப்புகளையும் இயக்குவதற்கு வாயுவானது உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாக இருக்கின்றது.

மேலே கூறிய விஷயத்தைக் கவனித்தால் நமது தேகத்தில் சில பொருள்கள் கனமான பதார்த்தமாகவும், சில பொருள்கள் ஜலமான பதார்த்தமாகவும் வாயுவான பதார்த்தமாகவும் இருக்கின்றன. இதைப்போலவே உலகத்திலுள்ள பொருள்களைக் கவனித்தாலும் சில கனமான பதார்த்தமாகவும், சில ஜலமான பதார்த்தமாகவும், சில வாயுவான பதார்த்தமாகவும் காண்கின்றன. இவைகள் தவிர வேறு விதமான

பதார்த்தம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், உலகத்திலுள்ள பொருள்களில், மண், கல், மரம் முதலியவற்றைப் போன்ற சில பொருள்களைக் கன பதார்த்தம் என்றும், தண்ணீர், எண்ணெய், பால் முதலியவற்றைப் போன்ற சில பொருள்களை ஜல பதார்த்தம் அல்லது திரவ பதார்த்தம் என்றும், காற்று, ஆவி முதலியவற்றைப் போன்ற சில பொருள்களை வாயு பதார்த்தம் என்றும் சாஸ்திரிகள் பிரித்துக் கூறுகிறார்கள்.



[இங்கே மூன்று பாத்திரங்களில் தண்ணீர் இருக்கின்றது. டம்ளரில் உள்ள தண்ணீர் டம்ளரின் உருவத்தையும், புட்டியிலுள்ள தண்ணீர் புட்டியின் உருவத்தையும், தட்டிலுள்ள தண்ணீர் தட்டின் உருவத்தையும் அடைந்து இருக்கின்றன. அதனால் தண்ணீருக்குத் தனக்கென்று ஏதும் உருவமில்லை என்று ஏற்படுகின்றது.]

இப்போது தண்ணீரைப்பற்றிக் கவனிப்போம்: தண்ணீர் திரவ பதார்த்தம். தண்ணீரை ஒரு பலகைமேல் ஊற்றினால், அது ஓரிடத்தில் நிற்காமல் பல பக்கங்களிலும் பரவி ஓடுகிறது. அதை ஒரு

பாத்திரத்தில் ஊற்றினால் அந்தப் பாத்திரத்தின் உருவத்தை யடைகிறது. திரவ பதார்த்தத்திற்கு தனக்கென்று ஓர் உருவம் இல்லை. கன பதார்த்தத்திற்கு உருவம் உண்டு. கன பதார்த்தத்தை உடைத்தால் தூள் தூளாக மாறுகிறது. திரவ பதார்த்தம் துளித் துளியாக விழுகிறது. வாயு பதார்த்தமும் அது அடையும் பாத்திரத்தில் பரவி அப்பாத்திரத்தின் உருவை யடைகிறது. தண்ணீர் திரவ பதார்த்தமாக இருந்தாலும் அதைக் கன பதார்த்தமாகவும் வாயு பதார்த்தமாகவும் மாற்றி விடலாம்.



[இங்கே முதலில் டம்ளரில் தண்ணீர் இருக்கிறது. இரண்டாவது இருப்பது பனிக்கட்டி, தண்ணீர் அதிக குளிர்ச்சியை அடைந்தால் பனிக்கட்டியாகிறது. மூன்றுவது டம்ளரிலுள்ள தண்ணீரில் பனிக்கட்டி மிதக்கிறது. தண்ணீர் உறைந்து பனிக்கட்டியானால், அது தண்ணீரைவிட லேசாய் விடுகிறது. அதனால் பனிக்கட்டி தண்ணீரில் மிதக்க ஆரம்பிக்கிறது.]

திரவ பதார்த்தமான தண்ணீரை மிகவும் குளிர்ச்சி யடையச் செய்தால், அது இறுகிக் கன பதார்த்தமான பனிக்கட்டி யாகிவிடுகிறது. குளிர் மிகுந்த நாடுகளிலுள்ள நீர்நிலைகள் மிகுந்த குளிர் உண்டானால் உறைந்து கட்டிப் போகிறது. அந்தப் பனிக்கட்டி-

யின்மேல் சூடுபடச் செய்தால், அது கரைந்து மறுபடியும் தண்ணீராக மாறிவிடுகிறது.

தண்ணீரை ஒரு பாத்திரத்திலிட்டு, அடுப்பின்மீது வைத்துக் காய்ச்சினால், அது ஆவியாக மாறிவிடும். அந்த ஆவிக்கு நீராவி என்று பெயர். ஒரு பானையி லுள்ள தண்ணீரை அதிகமும் காய்ச்சினால், அந்தத் தண்ணீர் எல்லாம் ஆவியாக மாறி, பானையில் தண்ணீரே இல்லாமற் போய்விடும்.



இதோ இந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீர் நெருப்பின் உஷ்ணத்தினால் ஆவியாகிப் போவதைப் பார். நாம் வசிக்கும் இந்தப் பூமியின் மேலுள்ள சமுத்திரம், நதி, ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் சூரிய உஷ்ணத்தினால் ஆவியாக மாறி மேலே எழுகின்றது. இந்த நீராவி சாதாரண வாயுவைக் காட்டிலும் லேசானதால், மேலெழுந்து ஆகாயத்திற் சென்று, மேக ரூபமடைந்து, குளிர்காற்றுப் பட்டவுடன் மழையாகப் பெய்கிறது.

பிள்ளைகளே! தண்ணீரோ திரவ பதார்த்தம்; அது அதிக குளிர்ச்சியையடைந்து கனபதார்த்தமாயிற்று; அதிக உஷ்ணத்தையடைந்து வாயு பதார்த்தமாயிற்று. இது அதிக ஆச்சரியகரமானதன்றோ!

## 5. தந்தை தாய்ப் பேண்

ஜப்பானியர் தாய் தந்தைய ரிடத்தில் மிகவும் அன்புள்ளவர்கள். தங்களுக்குத் துன்பம் வருவதானாலும் தம் தாய் தந்தையர் இட்ட கட்டளையைக் கடந்து நடக்கமாட்டார்கள். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை,' 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்னும் நீதி வாக்கியங்களை ஜப்பானியர் நியதியாகக் கொண்டு நடக்கிறார்கள். ஜப்பானியச் சிறுவர்கள் தம் தாய் தந்தைய ரிடத்தில் வைத்துள்ள அன்பைக் காட்டச் சில சிறு கதைகள் சொல்லுகிறேன் கேள் :

ஜப்பான் தேசத்தில் ஒரு பையனுக்கு மாற்றாந் தாய் ஒருத்தி இருந்தாள். அவள் அந்தப் பையனைச் சரிவரப் பாதுகாப்பதில்லை. அவள் என்ன கொடுமை செய்தாலும், சிறுவன் பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் அவள் அந்தப் பையனைக் கூப்பிட்டு, 'பையா! எதிரில் இருக்கும் குளம் குளிர்ச்சியால் உறைந்து கிடக்கிறது; போய் அதன் மேல் படுத்துக்கொள்' என்றாள். பையன் போர்வையும் இல்லாமல் அந்தப் பனியின்மேல் படுத்துக்கொண்டான். உடலின் உஷ்ணத்தினால் பனிக்கட்டி கொஞ்சம் உருக ஆரம்பித்தவுடனே, உள்ளே இருந்த இரண்டு நண்டுகள் மேலே வந்தன. சிறுவன் அவற்றைப் பிடித்துக்கொண்டு ஓடிவந்து, 'அம்மா! இந்த நண்டுகள் உனக்கு அதிக இஷ்டமல்லவா? அதனால், இவற்றைப் பிடித்து வந்தேன்' என்று அவளிடம் கொடுத்து, அவை கிடைத்த விதத்தையும் சொன்னான். மாற்றாந் தாய் அவற்றை வாங்கிக்கொண்டு

மகிழ்ச்சி யடைந்து, அன்றுமுதல் அவன்மேல் அதிக அன்பு பாராட்டத் தலைப்பட்டாள்.

ஜப்பான் தேசத்தில் ஒரு சிறுவன் தன் தாய் தந்தையருடன் ஓர் அறையில் படுத்துக் கொண்டு இருந்தான். அந்த அறையில் கொசுக்கள் அமிதமாக இருந்தன. கொசுக்களின் உபத்திரவத்தால் தாய் தந்தையர் தூங்கவில்லை என்பதைப் பையன் தெரிந்து கொண்டான். உடனே அந்தப் புத்திர சிகாமணி தன் உடைகளை எல்லாம் அவிழ்த்து அப்புறம் எறிந்து விட்டுக் குப்புறப் படுத்துக் கொண்டான். கொசுக்கள் கூட்டமாக மொய்த்துக்கொண்டு சிறுவனைக் கடிக்க ஆரம்பித்தன. அதனால், தாய் தந்தையர் நன்றாய் தூங்கிவிட்டார்கள். பொழுது விடிந்ததும் பெற்றோர் பிள்ளையைப் பார்த்தார்கள். உடல் முழுதும் கடிபட்டு இரத்தம் குழம்பி இருந்தது. பிறகு, அதன் காரணத்தைச் சொல்லக் கேட்ட பெற்றோர் பெரிதும் துக்கப்பட்டார்கள். பிள்ளாய்! இந்தச் சிறுவன் தன் தாய் தந்தையரிடத்தில் வைத்த அன்பை என்னவென்று கூறலாம்!

குழந்தாய்! இன்னொரு கதை சொல்லுகிறேன் கேள்: அது மிகவும் அற்புதமாக இருக்கும். ஜப்பானில் ஒரு ஸ்திரீக்கு மூன்று புத்திரர்கள் இருந்தார்கள். அவளுடைய புருஷன் இறந்துவிட்டபடியால், அந்தப் பிள்ளைகள் கூலிவேலை செய்து கொண்டுவரும் பணத்தைக்கொண்டு ஜீவனஞ் செய்துவந்தாள். அந்த மூவரும் மிகவும் சிறியவர்களானபடியால், அவர்கள் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுக்குப் பற்றாமல் இருந்தது. அதனால், கிடைத்ததைப் பிள்ளைகளுக்கு இட்டு, ஒவ்வொரு வேளை தாயார் பட்டினி

கிடக்கத் தலைப்பட்டாள். தாயார் பட்டினி கிடப்பதைப் பார்க்க மைந்தர்கள் மனம் சகிப்பதில்லை. அதனால் அந்த மூவரும் என்ன செய்வதென்று சிந்தித்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவர்களில் கடைசியானவன் மற்றவர்களைப் பார்த்து ஓர் உபாயம் சொன்னான்.



'அண்ணா! நான் ஒரு காரியம் சொல்லுகிறேன்: அப்படிச் செய்தால் நல்லது' என்றான். 'அதென்ன ?' என்று மற்ற இருவரும் கேட்டார்கள்.

சிறுவன் — 'நமது ஊரில் திருடர் பயம் அதிகமாக இருக்கிறது. திருட்டுப் பிள்ளைகளைப் பிடிப்-

பவர்களுக்குத் திரண்ட பொருள் கொடுப்பதாக ராஜா தெரிவித்து இருக்கிறார். அதனால் என்னைத் திருட்டுப் பையன் என்று கட்டிக்கொண்டுபோய் அரசன் முன் விட்டால் அதிக பணம் கொடுப்பார். அதைக்கொண்டு நீங்கள் நமது தாயாரை நன்றாய்க் காப்பாற்றலாம்' என்றான்.

மூத்தவன் — 'இது நல்ல உபாயந்தான். ஆனால் நீ வேண்டாம்; நீங்கள் இருவரும் என்னைக் கட்டிக்கொண்டு போங்கள்' என்றான்.

இரண்டாம் பையன் — 'நீங்கள் இருவரும் இருங்கள். என்னைக் கொண்டுபோய், திருடனென்று நிறுத்துங்கள்' என்று கூறினான்.

சிறுவன் — 'நீங்கள் சிறையில் இருப்பது சரி அன்று; நானோ மிகவும் சிறியவன். என்னால் வேலை செய்ய முடியாது. நான் கொஞ்ச காலம் சிறையில் இருந்தால் பிறகு பெரியவன் ஆவேன். அப்போது நான் விடுதலை அடைவேன். அடைந்ததும் நானும் உங்களோடு சேர்ந்து உழைத்துச் சம்பாதிப்பேன். ஆகையால், என்னைத் திருடனாக்குவதே தகுதி' என்று காரணம் கூறினான்.

அதைக் கேட்ட மற்ற இருவரும் சம்மதித்து, சிறுவனைக் கயிற்றால் கட்டிக் கொண்டுபோய் அரசன் முன் நிறுத்தினார்கள். அரசன் அந்தச் சிறிய திருடனைப் பார்த்து, 'இந்த வயதிலேயே திருட ஆரம்பித்து விட்டாயா? நீ கொஞ்ச காலம் சிறையில் இரு' என்று தீர்மானம் செய்துவிட்டு, அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் கொஞ்சம் திரவியம் கொடுத்து அனுப்பினான். அந்த இருவரும் பரிசு பெற்றுக்-

கொண்டு வெகு துயரத்தோடு வீட்டுக்குத் திரும்பினார்கள். அரசன் அவர்கள் துக்கக்குறியைக் கண்டு, 'திருடனுக்காக ஏன் இவ்வளவு துக்கப் படுகிறீர்கள்?' என்று கேட்டான். 'ஒன்று மில்லை, அரசே!' என்று சொல்லிக் கொண்டே அச் சிறுவர்கள் திரும்பிவிட்டார்கள்.



பிறகு, அரசனுக்கு ஒருவாறு சந்தேகம் பிறந்து, அவன் அன்று இரவு புறப்பட்டு, அப் பிள்ளைகள் வசிக்கும் வீதி வழியாகச் சென்றான். அங்கே அழுகுரல் கேட்டது. அரசன் அந்த வீட்டண்டைச் சென்று உற்றுக் கேட்டான். தாயாரைக் காப்பாற்றுவதற்குத் தனயர்கள் தாம் செய்த தந்திரத்தைச் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். அதைக் கேட்ட அரசன், மறுநாள் காலையில் அச் சிறுவனை விடுதலை செய்து, அவன் தன் தாயாரிடத்தில் கொண்டுள்ள அன்பைப் பலருக்கும் விளம்பரப்படுத்தி, திரண்ட செல்வமும் கொடுத்து அனுப்பினான். சிறுவன் கொண்டுவந்த செல்வத்தை வைத்துக்கொண்டு தாயும் பிள்ளைகளும் சிறக்க வாழ்ந்து வந்தார்கள். பிள்ளாய்! 'தந்தை தாய்ப் பேண்' என்னும் அமுத வாக்கை ஜப்பானியச் சிறுவர்கள் எப்படி ஆதரிக்கிறார்கள் பார்த்தாயா?

## 6. தண்டும் அடிமரமும்

தாவரங்களுக் கெல்லாம் வேரே முக்கியாதாரம் என்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். வேர், பூமிக்குள் பல பக்கங்களிலும் பரவி, மரம் கீழே விழாதபடி அதைத் தாங்குவதோடு அதற்கு வேண்டிய உணவையும் பூமியிலிருந்து கிரகித்துக் கொடுக்கின்றது.



வேருக்கு மேலும் கிளைக்குக் கீழுமாக இடையி லமைந்துள்ள பாகத்திற்கு அடி மரம் என்று பெயர். வேர் சேகரித்து அனுப்பும் ஆகாரத்தை அடி மரம் சேமித்து வைத்துக் கொண்டு, கிளை மிலாறு இலை பூ காய் முதலிய உறுப்புக்களுக்குச் செலுத்தி, அவற்றைப் போஷிப்பதோடு, அந்த உறுப்புக்களுக் கெல்லாம் பலத்தைக் கொடுத்துத் தளராமல் நிற்கச் செய்கின்றது. தாவரங்களின் அடிப் பாகங்களை அவற்றின் தன்மைகளுக் கேற்கப் பலவகையாகப் பிரிக்கலாம்.

படரும் செடிகள் — இவை பெரும்பாலும் ஏதேனும் ஓர் ஆதரவுப்பற்றித் தொத்தி யேறும் தன்மை யுடையன. இவற்றிற்கு 'தொத்தும் கொடிகள்' என்றும் சொல்வ-

துண்டு. அவரை, புடலை, பாகல், பீர்க்கு முதலியவை இவ்வினத்தைச் சேர்ந்தவை. இக் கொடிகளில் சில தாம் பற்றியேறும் கொழு கொம்புகளை வலப்புறமாகச் சுற்றி ஏறும்; சில இடப் புறமாகச் சுற்றி ஏறும். பூசனி, சுரை முதலிய சில கொடிகள் தரையின்மேல் படர்ந்து பரவி யிருப்பதும் உண்டு. இவற்றிற்கு மெல்லிய கம்பி போன்ற கிளைக் கொடிகள் இருப்பதனால், கொடிகள் அதிக காற்றினால் அலைந்து அப்புறம் செல்லாதபடி அந்தக் கிளைக் கொடிகள் காக்கின்றன.



ஓடும் கொடிகள் — இவ்வகையில் முக்கியமானது அறுகம்புல். சக்கரைவள்ளியும் இதில் சேரும். இவை பூமியின் மீது நெடுக ஓடுவதனால் பல பக்கங்களிலும் இலை படர்வதற்கு மார்க்க மில்லாமல், கணுக்களண்டை அங்கங்கே வேர்கள் விட்டு, புதிதாகத் தளிர்கள் உண்டாகின்றன. இதனால் முன்னுள்ள பழைய பாகங்கள் உலர்ந்து கெட்டுப்போயினும் செடிக்கு நாசமுண்டாவதில்லை.

செங்குத்தாக நிற்கக்கூடிய அடிமரங்கள் — ஆல், அரசு, அத்தி, புளி, பூவரசு, தென்னை, பனை முதலிய விருக்ஷங்களெல்லாம் இந்த வகையில் சேரும். மரமானது கிளைகள் விட்டுப் பல பக்கங்களிலும் படர்ந்து வளரும்படி அடிமரம் தாங்கி நிற்கின்றது.



கிழங்குகள் — கிழங்குகளை அடிமரங்களென்று சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமுண்டாகுமல்லவா? மற்றெல்லா வகைகளுக்கும் அடிமரம் பூமிக்கு மேலே இருக்க, இந்த வகைக்குமட்டும் வேரைப்போல் அது பூமிக்குள் அமைந்திருப்பது ஆச்சரியமல்லவா! வெங்காயம், உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு முதலிய கிழங்குவகைகள் இந்த இனத்தைச் சேர்ந்தவையாம்.

## 7. துஷ்ட பந்துக்கள்

குடியானவன் ஒருவன் பல்லன் என்னும் பட்டிநாய் ஒன்றை வளர்த்து வந்தான். அது தன் எஜமானன் இட்டதை யுண்டு, அவனது ஆடுமாடுகளைப் பக்ஷ-மாகப் பராமரித்து வந்தது. அந்த நாய் வீரமும் தீரமும் வாய்ந்தது. செய்தொழிலில் சோர்வடை-யாத திறமையுள்ளது.



பல்லன் ஒருநாள் காட்டில் மேய்ந்துகொண்-டிருந்த ஆட்டு மந்தையைக் காவல் செய்துகொண்டு இருந்தது. தன் எஜமானன் வந்த பிறகு, அந்த நாய் உல்லாசமாக அப்புறஞ் சென்று, திரிந்துகொண்டு இருக்கையில், ஒரு நரியும் ஓநாயும் ஓரிடத்தில் உட்-கார்ந்திருக்கக் கண்டது; கண்டதும் அவற்றின்மீது வெறுப்புக்கொண்டு, திரும்பிச் செல்லத் தலைப்பட்-டது. அதைக் கண்ட ஓநாய் ஓடிவந்து, 'அண்ணா, ஏன் எங்களை அசட்டை செய்கிறீர்? நாங்கள் உங்-கள் இனத்தவர் அல்லவா? உம்மைப் பற்றித்தான்

இப்போது நாங்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்தோம்; தயைசெய்து வாரும், சில விஷயம் உம்மோடு பேசவேண்டும்' என்று அழைத்தது. பல்லனும் இசைந்து அவர்களுடன் கூடிற்று.

அப்போது நரி நாயைப் பார்த்து, 'அண்ணு, நம்முடைய உருவத்தைப் பார்த்தால், நாம் எல்லோரும் ஒரே இனத்தவர் என்பதற்குச் சற்றும் சந்தேகம் இராது. அப்படியிருக்க எங்களைக் கண்டதும் உமக்கு வெறுப்பு உண்டாவதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டது. அதற்கு நாய், 'ஆம் அப்பா, நீங்கள் காட்டில் இருக்கிறீர்கள், நான் நாட்டி லிருக்கிறேன். நமக்குள் எப்படி நட்பு உண்டாகும்?' என்று சொல்லிற்று.

அதைக் கேட்ட நரி, 'நண்பரே, இருப்பிடத்தைக் கொண்டே இனம் வேருய் விடுமா — நம்முடைய பெரியோர்கள் பண்டைக் காலத்தில் ஒரே இடத்தில்தான் வசித்திருந்தார்கள். நாம் எல்லோரும் வடநாட்டில் அதிக குளிர்ச்சியான பிரதேசத்தில் வசித்திருந்ததாக உயிர்நூற் புலவர்கள் இன்னும் உரைக்கிருர்கள். நீ மட்டும் எங்களை அகன்று, நாட்டில் சென்று, மனிதரோடு பழகி நல்லவன் என்று பேரெடுத்துக் கொண்டாய். நாங்களோ காட்டிலேயே திரிந்துகொண்டு கஷ்டப்படுகிறோம். பழைய உருவத்தில் உனக்குப் பாதியளவு மாறிவிட்டது; எங்களுக்குப் பழைய உருவம் அப்படியே இருக்கிறது. குளிர் நாட்டில் வசித்தபடியால் முகம் குறுகிக் கூர்மையாக இருக்கிறது. வால் மயிர் அடர்ந்திருக்கிறது. வளை தோண்டிக்கொண்டு வசிக்கிறோம். நீயும் படுக்கவேண்டுமானல் மண்ணைப் பறித்துப் பள்ளந்

தோண்டிக் கொண்டுதான் படுக்கிறாயாம். இவ்வளவு ஒற்றுமை நமக்குள் ஏற்பட்டிருக்க நீ எங்களைப் புறக்கணிப்பது ஏற்றதாமோ' என்று பரிந்து கூறிற்று. பழைய வரலாற்றைக் கேட்டதும் பல்லனுக்கு அவைகளிடம் பக்ஷம் உண்டாயிற்று. உடனே அது, தன் நண்பர்களைப் பார்த்து, 'அன்பர்களே, இதுவரையில் இந்த உண்மையை நான் அறியாமற் போனேன்; இனி நாம் அனைவரும் ஒன்றுகூடி உவந்து வாழ வேண்டும்' என்றது.

உடனே மூன்றும் கூடி உல்லாசமாக உலவப் போயின. பொழுது சாய்ந்ததும் நாய் தன் ஆட்டு மந்தையண்டை வந்தது. அவை இரண்டும் பல்லனோடு மெல்ல வந்தன. அவைகளைக் கண்டு ஆடுகள் அச்சங்கொண்டு ஓடத் தலைப்பட்டன. பல்லன் தன் நண்பர்களைப் பார்த்து, 'உங்களைக் கண்டதும் ஆடுகளுக்கு அச்சம் உண்டாகிறது. நீங்கள் உங்கள் இருப்பிடம் சென்று, நாளைய தினம் நான் வசிக்கும் கிராமத்திற்கு வாருங்கள். நீங்களும் மனிதரிடம் பழகினால் நாளடைவில் நல்லவர்கள் ஆவீர்கள். அப்போது ஆடுமாடுகளுக்கு உங்களிடம் அச்சம் உண்டாகாது; போய் வாருங்கள்' என்றது. அதைக் கேட்டு நரியும் கோனும் மெல்லப் போய்விட்டன.

மறுநாள் மாலை நரியும் ஓநாயும் பல்லனைத் தேடிக்கொண்டு ஊருக்குள் வந்தன. பல்லன் அவர்களைப் பக்ஷத்துடன் வரவேற்று உபசரித்தது. தனக்குக் கிடைத்த உணவில் கொஞ்சம் அவைகளுக்குக் கொடுத்தது. அவைகள் அதைத் தின்று, கொஞ்சநேரம் குலவிவிட்டுக் காட்டுக்குத் திரும்பிவிட்டன. மறு நாள் காலையில் குடியானவன் வீட்டில் ஒரு

கோழியும் ஒரு வாத்தும் காணுமற் போயின. பல்லனுக்கு அங்கம் பதைத்தது. தான் அங்கே இருந்தும் அவைகள் எப்படிக் களவு போயின என்று அதற்குத் தெரியவில்லை. ஆயினும், பல்லனுக்குத் தன் இனத்தார்மேல் அப்போது சந்தேகம் பிறக்கவில்லை. அடுத்தநாள் மாலையிலும் நண்பர்கள் அங்கே வந்தார்கள். பல்லன் அவர்களைப் பார்த்து, 'அன்பர்களே! நீங்கள் பகலில் வந்தால் நலமாக இருக்கும். மனிதர்களும் உங்களைக் கண்டு களிப்பார்கள். நீங்களும் அவர்களுடன் பழகலாம்' என்றது. 'அண்ணு! எங்களுக்கு அலுவல் அதிகம்; பகலில் வரத் தீராது. கொஞ்ச நாள் இரவில் வந்து, பிறகு பகலில் வரப் பழகிக்கொள்ளுகிறோம்' என்று நரி கூறிற்று. பின்பு அவை இரண்டும் கொஞ்சநேரம் பல்லனோடு சல்லாபித்துக்கொண் டிருந்து, வந்தனஞ் சொல்லி, வனத்திற்குப் போயின. அடுத்த நாள் காலையில் ஓர் ஆட்டுக்குட்டியும் ஒரு வாத்தும் காணுமற் போயின. போகவே, பல்லனுக்குத் தன் இனத்தார்மீது சந்தேகம் உண்டாயிற்று. அடடா, இனத்தார் என்று இரண்டு நாளும் ஏமாந்தோம்; இனியும் அப்படி இருக்கலாகாது. இன்று விழிப்புடன் இருந்து கள்வர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்று ஜாக்கிரதையாக இருந்தது.

மாலையானதும் இரண்டும் வந்தன; வந்ததும் பல்லனுக்கு வந்தனம் சொல்லின. பல்லன் பக்ஷமாக இருப்பதுபோலவே பாவனை காட்டிற்று. அவைகள் சிறிதுநேரம் பல்லனோடு பேசிக்கொண்டிருந்து, தம் இருப்பிடத்திற்குப் போகப் புறப்பட்டன. பல்லன் மெல்லப் பின் தொடர்ந்தான். கோனும் பதுங்கிச்

சென்று ஓர் ஆட்டுக்குட்டியைப் பிடித்துக்கொண்டது. நரியும் ஒரு வாத்தைப் பற்றிக்கொண்டு பரிந்து ஓடிவந்தது. பல்லனுக்கு ஆத்திரம் அடக்க முடியவில்லை. உடனே வீராவேசங் கொண்டு இரண்டின் மேலும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. கோணுய்க்குக் குடல் நடுங்கிற்று. நரி நடுக்கங்கொண்டது. அப்போது பல்லன் அவைகளைப் பார்த்து, 'துஷ்டர்களே! உங்களை என் இனத்தவர் என்று எண்ணி ஏமாந்தேன். இனி ஒருபோதும் நீங்கள் இங்கே வரக்கூடாது. இனி வருவீர்களானுல் உங்கள் உயிரை இழக்க நேரிடும். உங்களுடைய கூட்டுறவினுல் என் எஜமானனுக்கு நான் துரோகி யானேன். நீங்கள் உருவத்தினுல் என் உறவினரானுலும் குணத்தினுல் விரோதிக ளாவீர்கள். ஒரு க்ஷணமும் இங்கே நிற்கக்கூடாது; ஓடிப் போய்விடுங்கள்' என்றது. அதைக் கேட்டுத் தப்பினதே போதும் என்று அவை இரண்டும் ஓட்டம் பிடித்துக் காட்டை யடைந்தன.

## 8. நாயினம் - I

பிள்ளைகளே! நீங்கள் பூனை இனத்தைப்பற்றி முன்பு வாசித்திருக்கிறீர்கள். இப்போது நாயினத்தைப்பற்றி வாசிப்போம். நாய் மிகப் பழைய காலத்தில் குளிர் நாட்டிலுள்ள காடுகளில் வசித்திருந்த கொடிய மிருகம் என்றும், அது நாடுகளில் வந்து மனிதருடைய பழக்கத்தால் சாந்தகுணம் அடைந்த தென்றும் உயிர் நூற்புலவர்கள் உரைக்கிறுர்கள். நாயினத்தைச் சார்ந்த அநேக பிராணிகள் இன்னும் காட்-

டிலேயே வசித்துக்கொண்டு, குரூரகுணம் மாறாமலே இருக்கின்றன. அவற்றைப்பற்றி இங்காராய்வோம்:

இந்தப் படத்தைப் பாருங்கள். இது ஒரு நரி-யின் உருவம். இதைப் பார்த்தால் நாயைப் போலவே இருக்கிறது. தேகத்திலும் வாலிலும் மயிர் அடர்ந்து நீண்டிருக்கிறது. முகம், தலைப்பக்கம் அகன்று, முனை மிகவும் குவிந்து இருக்கிறது. நரி இரவில் இரைதேடும் பிராணி. நடு ராத்திரியில் இதற்கு அவ்வளவு தெளிவாகக் கண் தெரியாது.



அந்தக் காலத்தில் இடுக்குகளில் புகுவதற்கு இதன் மீசை மயிர் உபயோகப் படுகிறது. நரியின் காதைக் கவனித்துப் பார். அது பூனைக்கு இருப்பதுபோல் செங்குத்தாய் நீண்டிருக்கிறது. நரி தான் விரும்பியபடி காதைத் திருப்பி, சத்தத்தை நன்றாய் உணரும். அதன் முகம் முன்புறம் ஒடுங்கி யிருப்பதனால் நரிக்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம்.

நரியின் பற்கள் நாயின் பற்களைப் போலவே இருக்கும். நரி, மாமிசம் முதலியவற்றைக் கடித்துத்

துண்டித்து மெல்லாமல் விழுங்கும். நரி, நாயைப் போலவே தன் இரையை வாயாற் கவ்விப் பிடிக்கும் தன்மையுள்ளது. கால் நகங்கள், தடித்து உறுதியாக இருப்பதனால், குழிகள் தோண்ட உபயோகமாக இருக்கின்றன. கோழி முதலியவற்றைப் பிடிக்க வரும்போது, கோழிக் கூட்டின் சுவர்களையும் நரி தன் நகங்களால் பிறுண்டித் தொளை செய்து உள்ளே புகுந்து திருடும்.

சில ஆண் நரிகளுக்கு மண்டையில், இரண்டு காதுகளுக்கும் இடையில், ஒரு சிறு கொம்பு முளைக்கும். அது சுமார் அரை யங்குல நீளத்திற்கு மயிர் அடர்ந்திருக்கும். இப்படிக் கொம்பு முளைத்த நரிக்கு மற்ற நரிகள் அடங்கி நடக்கும். அதனால், கொம்பு முளைத்த நரி நரிராஜனாக விளங்குகிறது. நாடோடி-களாகத் திரியும் குருவிக்காரர்கள் இத்தகைய நரியை வேட்டையாடிக் கொன்று, நரிக்கொம்பைக் கொண்டு வந்து நாட்டில் விற்பார்கள். மனிதர்கள் அதை விரும்பி வாங்குவதுண்டு. நரிக்கொம்பை வைத்-திருந்தால் சகலரும் தமக்கு வசப்பட்டு, தம் சொற்-படி கேட்பார்கள் என்று சிலர் நம்புகிறார்கள்.

நரி வெகு தந்திரமுள்ள பிராணி. நரியின் தந்-திரத்தைப்பற்றி நீங்கள் பல கதைகள் கேட்டு இருப்-பீர்கள். அது உண்மையில் தந்திரமான பிராணியே நரி ஏதேனும் இரையை எடுத்துக்கொண்டு ஓடும்-போது, எதிரில் தன் விரோதியான மிருகம் ஏதே-னும் வரக்கண்டால், அந்த இரையை மறைவான ஓர் இடத்தில் போட்டுவிட்டு, அருகில் கிடக்கும் மட்டை செத்தைகளை வாயிற் கவ்விக்கொண்டு ஓடும். விரோதி மறைந்து போய்விட்டால், திரும்பி வந்து, மறைத்து

வைத்த அந்த இரையை எடுத்துக்கொண்டு ஓடிப்-போகுமாம். நரிகளை வேட்டையாடுவோர் வேட்டை நாய்களைக் கூட்டிக்கொண்டு போவது வழக்கம். வேட்டைநாய் துரத்திக்கொண்டு வருகையில், நரி தன்னாலானமட்டும் விரைவாக ஓடும். நாய் சமீபத்-தில் வருவதைக் கண்டால், நரி ஒரு தந்திரம் செய்-யும். அது என்ன என்பீர்களோ, நரிக்குப் பிஷ்ட பாகத்தில் வாலுக்கடியில் இரண்டு தைலப் பைகள் உண்டு. அதிலுள்ள தைலம் சகிக்கமுடியாத துர்க்-கந்தமுள்ளது. நாய் தன் அருகில் வரக்கண்டால், நரி, அந்தத் தைலத்தைக் கசியவிடும். அதன் துர்க்-கந்தம் பட்டவுடனே வேட்டை நாய் திகைத்து நின்றுவிடும். அப்போது நரி விரைவாக ஓடித் தப்-பித்துக் கொள்ளும். இதுவும் ஒரு தந்திரந்தானே!

மனிதர்கள் வஞ்சகமாகவும் தந்திரமாகவும் நடந்-தால், அவர்களை 'நரிக்குளிப்பாட்டி' என்று சொல்லு-கிறோம். அது என்ன தெரியுமா — நரிக்கு உடலில் அதிகமும் பேன் பிடித்துவிட்டால், அதை ஒழிக்க நரி ஒரு தந்திரம் செய்யுமாம். அது தன் வாயில் ஒரு சிறு கொம்பைப் பற்றிக்கொண்டு, ஒரு குட்-டைக்குப் போய் தண்ணீரில் இறங்கி, முதலில் தன் பின் கால்களையும் வாலையும் நனைக்கும். அப்போது அங்கிருந்த பேன்கள் எல்லாம் வயிற்றிலும் முது-கிலும் ஏறிக்கொள்ளும். பிறகு, கொஞ்சங் கொஞ்ச-மாகக் கழுத்துவரையில் உடலை நனைக்கும். அப்-போது பேன்கள் தலையிலும் முகத்திலும் வந்து நிறைந்துவிடும். பிறகு, நரி தன் தலையை வாயள-வுக்குத் தண்ணீரில் முழுக்கும். அப்போது பேன்க-ளெல்லாம் நரியின் மூக்கண்டை நிற்க முடியாமல்,

வாயில் பற்றிக்கொண்டிருக்கும் கட்டையின்மேல் ஏறிக்கொள்ளும். ஏறக்குறைய எல்லாப் பேன்களும் ஏறிக்கொண்டதைக் கண்டவுடன், நரி அக் கொம்-பைத் தண்ணீரில் போட்டு விட்டு ஓடிப் போய்விடும். இதனல்தான் 'நரிக்குளிப்பாட்டி' என்னும் பழமொழி வழங்குகின்றது. இதுவும் ஒரு விந்தைதானே!

கிழட்டு நரிகள் தம் இரையை வேட்டையாடிப் பிடிக்கச் சக்தியற்றபோது, நண்டு முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். எப்படிப் பிடிக்கும், கிழட்டு நரி தன் வாலை நண்டுவளைக்குள் நுழைக்கும். நண்டு ஏதோ, தன் வளைக்குள் வருகிறதென்று நினைத்துத் தன் கொடுக்கினல் அதைப் பற்றிக்கொள்ளும். நரி அதை உணர்ந்து, தன் வாலை விரைந்து இழுக்க, நண்டு வெளியே வந்து விழும். உடனே நரி அதைப் பிடித்துக் கொன்று தின்னும். இதுவும் ஒரு தந்-திரந்தானே!

கோழி, வாத்து, ஆட்டுக்குட்டி, முயல், மான்-கன்று முதலியவற்றை நரி பிடித்துத் தின்னும். நரி, இவைகளைப் பிடிக்கும்போது அவை சத்தம் செய்யாதபடி கழுத்தண்டைக் கவ்விப் பற்றிக்கொள்-ளுவது வழக்கம். நரி, பூமியில் புதைத்துள்ள பிணங்-களையும் தோண்டித் தின்பதுண்டு.

# 9. நாயினம் - II

இது ஒரு குள்ள நரி. இதன் பெயரைக் கேட்கும்-போதே இது நரியினும் சிறியதென்று உங்களுக்கு விளங்கும். இது விரைவாக ஓடும்; தண்ணீரிலும் நன்றாய் நீந்தும். குள்ளநரி பகலில் ஏதேனும் ஒரு மரத்தடியில் பள்ளந் தோண்டிக்கொண்டு பதுங்கி யிருந்து, இரவானதும் இரை தேடப் புறப்படும். இதற்கு இரவில் நன்றாய்க் கண்தெரியும். குள்ளநரி



எதையும் தின்னும். நண்டுகளைப் பிடித்துத் தின்னப் பிரியப்படும். பிராணிகள் ஏதும் அகப்படாவிட்-டால் காய் கனிகளையும் தின்பதுண்டு. சமயம் வாய்த்தால் ஊர்களில் புகுந்து, கோழி, வாத்து முத-லிய ஜந்துக்களைப் பிடித்துக் கொண்டுபோய்விடும். குள்ளநரி அதிக தந்திரமுள்ளது. இதற்கும் பிஷ்ட பாகத்தில் தைலப்பை யுண்டு. வேட்டை நாய் முத-லிய விரோதிகள் சமீபத்தில் வந்துவிட்டால், அந்தத்

தைலத்தைக் கசியவிட்டு, துர்க்கந்த முண்டாக்கித் தப்பித்துக்கொண்டு ஓடிவிடும்.

இது ஓர் ஓநாயின் படம். இதைக் கோனுய் என்றும் கூறுவதுண்டு. இது விசேஷமாகச் சீதள-தேசங்களில்தான் வசிக்கும். அதனுல் இதற்கு உட-லிலும் வாலிலும் மயிர் அடர்ந்திருக்கிறது. கோனுய் மிகவும் கொடியது. கூட்டங்கூடி வேட்டை மேற் சென்று, குதிரை கழுதை முதலியவற்றைக் கொன்று



தின்னும். சமயம் வாய்த்தால் மனிதர்களையும் கொல்ல வகைதேடும். சாதாரணமாக ஓநாய் தனி-த்தே வசிக்கும். விரோதிகள் தன்னைத் துரத்திக்-கொண்டு வந்தால் காற்றுக்கு எதிர்முகமாக ஓடித் தப்பித்துக்கொள்ளும். இதற்குப் பிஷ்டபாகத்தில் தைலப்பை கிடையாது.

இது ஒரு செந்நாயின் படம். செந்நாய் என்-ருல் சிவப்பான நிறமுடைய நாய் என்று அர்த்தம். இது சாதாரண நாயைக்காட்டிலும் பெரியது. உட-

லின் முன்பாகம் பருத்தும் பின்பாகம் சிறுத்தும் இருக்கும். நாயினத்தைச் சார்ந்த மற்ற மிருகங்களை ஒருகால் பழக்கலாம்; செந்நாயை ஒருகாலும் பழக்க முடியாது. இது ஆடு, மாடு, மான் முதலிய மிருகங்களை வேட்டையாடிக் கொல்லும்; சமயம் வாய்த்தால் புலி சிறுத்தைகளையும் ஒருகை பார்க்கவல்ல தைரிய முள்ளது. செந்நாய்க்கும் வாலின் கீழ் தைலப்பை உண்டு. செந்நாய் அதை ஒருவிதமாக உபயோகிக்-



கின்றது. தன் இரைக்கான பிராணிகள் நடமாடும் இடங்களில் அத் தைலத்தைத் தெளித்து வைக்கும். அந்தக் கெட்ட நாற்றத்தினால் பிராணிகள் மயங்கிக் கிடக்கும்போது செந்நாய் விரைந்து சென்று அவைகளை வேட்டையாடும். சில சமயங்களில் அந்தப் பிராணிகளின் முகத்திலும் இந்தத் தைலத்தை தடவப் பார்க்கும்.

பிள்ளைகளே, இந்தப் பாடததில் வந்துள்ள நரி, குள்ள நரி, கோனாய், செந்நாய் முதலிய பிராணிகள் குணம் குறிகளில் பெரும்பாலும் நாயை ஒத்திருக்கின்றன. இதை விளக்க இன்னொரு விஷயம் கூறுகிறேன் கேளுங்கள். வெய்யிற் காலத்தில் நாய் ஓடும்-

போது பார்த்திருக்கிறீர்களா — எப்படி ஓடுகின்றது — நாக்கைத் தொங்கவிட்டு ஓடுகிறதல்லவா? ஏன் தெரியுமா? நாய்க்கு வேர்வை உடலின் வழியாகக் கழிவதில்லை; நாக்கின் வழியாகவே கழிகிறது. அதனால் நாய் நாக்கைத் தொங்கவிட்டு ஓடுகின்றது. மேலும் வெய்யிற் காலத்தில் நாய்க்கு உடலின் மயிர் உதிர்கின்றது. சில நாய்களுக்குச் சொரியும் உண்டாகிறது. வேர்வை முழுதும் வெளிப்படாவிட்டால் சில நாய்களுக்குப் பைத்தியமும் பிடிக்கும். இந்தச் செய்கைகள் எல்லாம் காட்டிலிருக்கும் இதன் இனத்து மிருகங்களுக்கும் உண்டு. இதனாலும் மேலே கண்ட மிருகங்கள் நாயினத்தைச் சேர்ந்தவை என்று நன்கு விளங்குகின்றது.

## 10. வெறுப்பு விருப்பானது - I

(ஒரு சம்பாஷணை)

வேலன் — வேங்கடேச, சவுக்கியந்தானே?

வேங்கடேசன் — சவுக்கியந்தான், நண்பர்களுடைய நல்ல எண்ணம் இருக்கும்போது, சவுக்கியம் இல்லாமற் போகுமா?

வேலன் — அண்டை வீட்டில் இப்போது இருப்பது யார்? யாரோ புதிதாகக் காண்கிறதே.

வேங்கடேசன் — புதியவர்தான், யாரோ நல்லசாமி என்பவராம்.

வேலன் — அதென்ன, அயல் வீட்டாரை யாரோ என்கிறீர், வெறுப்பாகவும் கூறுகிறீரே, ஏன், நல்லவர் அல்லவோ?

வேங்கடேசன் — நல்லவரா — கெட்டவராக இராமலிருந்தால் போதாதா. இவரைப் பார்த்து மற்றும் இருப்பவர்களும் கெட்டுப் போவார்கள்போல் இருக்கிறதே.

வேலன் — அப்படியானால் கஷ்டந்தான்; இருக்கட்டும், அவர் சங்கதிதான் என்ன?

வேங்கடேசன் — சங்கதியா — எதிலும் எங்க ளிருவருக்கும் பொருத்தம் கிடையாது. பொது விஷயங்களில் அவருக்குப் புத்தி செல்வதே இல்லை. இன்னும் என்ன சொல்லவேண்டும்?

வேலன் — இருக்கட்டும், இன்னும் என்ன?

வேங்கடேசன் — இன்னுமா — ஆட்டம் பாட்டு முதலிய விஷயங்களிலாவது ஒற்றுமை உண்டா — அதுவும் கிடையாது. இப்படிப்பட்டவ ரிடத்தில் நமக்கு எப்படி நட்பு உண்டாகும்?

வேலன் — அவர் இந்த ஊருக்குப் புதியவர்தானே, எப்பொழுதாவது நீங்கள் இந்த விஷயங்களுக்கு அவரை அழைத்ததுண்டா?

வேங்கடேசன் — அழைப்பானேன் — அவரே வந்து ஏன் கலக்கக்கூடாது. நான்கு பேரோடு கலக்கிற சுபாவமே அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. கொஞ்சம் கையழுத்தக்காரர் போல் தோன்றுகிறது.

வேலன் — எந்த விஷயத்திலாவது அவர் அப்படிக் காட்டிக்கொண்ட துண்டோ?

வேங்கடேசன் — பிறர் விஷயத்தில் எப்படியாவது இருக்கட்டும், தம் விஷயத்திலேயே தாராள சிந்தை கிடையாது. அவருடைய செல்வத்திற்குச் செலவு மட்டென்றே சொல்லலாம். கடுகளவுக்கும் கணக்குப் பார்க்கிறாரே.

வேலன் — தம் விஷயத்தில் அப்படி யிருந்தாலும், தரும விஷயத்தில் தாராளமாக இருக்கப்படாதா?

வேங்கடேசன் — தரும விஷயமா — நன்றாய்ச் சொல்லினை! ஒரு நாள் ஏழை யொருவன் தன் வீடு முழுதும் தீப்பற்றிக்கொண்டு அழிந்து விட்டதென்று சொல்லி, கொஞ்சம் உபகாரம் செய்யும்படி கேட்டான். எத்தனையோ பெரிய மனிதர்கள் தம்மா லானவரையில் உதவி புரிவதாக கையொப்ப மிட்டிருந்தார்கள். இவர் மட்டும் யோசித்துச் சொல்லுவதாகக் கூறி அனுப்பிவிட்டார். இதை என்ன வென்று நினைக்கிறாய்? பின்னை என்பதும் பேசாமல் இருப்பதும் இல்லை என்பதற்கு அடையாளமல்லவா?

வேலன் — அப்படிச் சொல்லிவிடக் கூடாது. சிலர் சொல்லிச் செய்வர், சிலர் சொல்லாமற் செய்வர், சிலர் சொல்லியும் செய்யார். இவர் சொல்லாமற் செய்பவராக இருக்கக்கூடாதா; இருக்கட்டும், இவர் அந்த ஏழையிடம் சொல்லியபடி யோசித்தாரா?

வேங்கடேசன் — அதென்னவோ, எனக்குத் தெரியாது ; செய்பவரானுல் உடனே செய்யமாட்டாரா ?

வேலன் — இதுவும் இருக்கட்டும், அவரிடம் இன்னும் ஏதேனும் துர்க்குணம் உண்டோ ?

வேங்கடேசன் — துர்க்குணத்திற்கு அளவு சங்கையே கிடையாது. கவனித்துச் சொன்னுல் கணக்கில்லாமல் சொல்லலாம். ஒரு சங்கதி சொல்கிறேன் கேள் : அவரிடத்தில் ஒரு குதிரை இருந்தது. அதை அவர் விற்கவேண்டு மென்று தலைப்பட்டார். குதிரை அழகாகவே இருந்தது. அதை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று எனக்கு விருப்பம். சரியான விலையும் கேட்டேன். அது அவருக்குத் தெரிந்திருந்தும், அந்தக் குதிரையைச் சந்தைக்கு அனுப்பி ஏலத்தில் விற்று விட்டாராம். இது கிடக்கட்டும்; ஒரு செடி விஷயத்தில் அவர் சிந்தை எனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. நமது வீட்டுப் பெண்டுகள் ஏதோ ஒரு செடி வேண்டுமென்று தோட்டக்காரன் மூலமாகக் கேட்டனுப்பினுர்களாம். நமது தோட்டக்காரன் அவருடைய தோட்டக்காரனைக் கேட்டானும். அவன் தன் எஜமானரைக் கேட்டானும். அதற்கு என்ன பதில் சொல்லுவது — முடியாது என்றுலும் போய்விட்டது. ‘சரிதான் இருக்கட்டும், அந்தச் செடியை யாராவது தொடப் போகிறுர்கள். பத்திரமாகப் பார்த்துக்கொள்’ என்றுராம். இதைப்பற்றி என்ன நினைக்கிறுய் ? இதுவும் இருக்கட்டும். இன்னென்று கேள் : என்னிடம்

நெடுநாளாக ஒரு வேலைக்காரன் இருந்தான். வீரன், உனக்கும் தெரியுமே; அவன் ஒருநாள் அதிக்கிரமித்துப் பேசினான். எனக்குக் கோபம் வந்து அவனை வேலையினின்றும் விலக்கிவிட்டேன். அவன் நமது அண்டை வீட்டுக்காரரிடம் போனான். போனதும் அவனுக்கு ஏதோ வேலை கொடுத்து தம்மிடம் அமர்த்திக்கொண்டார். அமர்த்திக் கொள்ளட்டும், மரியாதைக்காவது என்னை ஒருசொல் கேட்க வேண்டாமா, ஒன்றும் இல்லை, வந்ததே போதுமென்று வேலை கொடுத்துவிட்டார். இதைவிட நமக்கு என்ன விரோதம் செய்யவேண்டும். நான் சொல்வது ஒருகால் விரோதத்தினால் சொல்லுவதாகத் தோன்றும், வீட்டை எரியக் கொடுத்த ஏழை இதோ வருகிறான், அவனைக் கேட்டால் உண்மை தெரியும். இங்கே வா, அப்பா வாசு, ஜாபிதாவினால் ஏதாவது தொகை ஏற்பட்டதா ?

வாசு — ஐயா, ஆண்டவன் அருளால் அவ்வளவு நஷ்டத்திற்கும் தொகை கிடைத்துவிட்டது.

வேங்கடேசன் — அதெப்படி, அன்று நான் பார்த்தபொழுது கொஞ்சம் தொகைதானே கையொப்பம் ஆயிருந்தது. இதற்குள் எப்படி முற்றுப் பெற்றது ?

வாசு — அப்படித்தான் இருந்தது, அன்று தங்கள் அயல் வீட்டார்—நல்லசாமி என்பவரைக் கண்டேன். யோசிக்கலாம் என்று கூறினார். அந்தப் புண்ணியவான் மறுநாள் காலையே எங்கள் கிராமத்திற்கு வந்து, என்னைப் பற்றியும்

எனக்கு நேர்ந்த நஷ்டத்தைப் பற்றியும் விசாரித்து, உண்மை யுணர்ந்து, என்னைக் கூப்பிட்டு ஐந்நூறு ரூபாய் கொடுத்தார். கடவுள்தான் அவருக்குக் கிருபை செய்யவேண்டும். ஏழை, நான் என்ன செய்யப்போகிறேன்.

வேங்கடேசன் — ஐந்நூறு ரூபாயா — ஆச்சரியந்தான்.

வாசு — ஆம் ஐயா, ஐந்நூறுக்கு அரைக் காசும் குறைவில்லை. அந்தத் தொகையைக் கொண்டு வீட்டைக் கட்டிமுடித்தேன். முன் போலவே ஒரு வண்டிமாடும் வாங்கிக் கொண்டேன். முன்னிலும் சுகமாக ஜீவித்து வருகிறேன்.

வேங்கடேசன் — ஐந்நூறென்றால் கொஞ்சமா — பெரிய தொகைதான். அதில் பத்தில் ஒரு பங்கும் அவர் கொடுப்பாரென்று நான் நினைக்கவே இல்லை. இந்த நன்றியை நீ ஒருபோதும் மறக்கலாகாது.

வாசு — மறந்தால் எனக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்காமற் போகும். அவரையே யன்றி எனக்கு உதவிய உத்தமரை யெல்லாம் நான் ஒருபோதும் மறவேன், போய் வருகிறேன்.

## 11. வெறுப்பு விருப்பானது - II

வேலன் — வேங்கடேசா, இதைக் கண்டால் அவரைக் கையழுத்தக்காரர் என்று சொல்வதற்கில்லையே.

வேங்கடேசன் — ஒருகால் நான் எண்ணியது குற்றமாக இருக்கலாம், ஆனால், அந்த உபகாரம் அவர் மனமாரச் செய்ததோ இல்லையோ என்பது இன்னும் எனக்குச் சந்தேகந்தான். அந்தக் குதிரை விஷயத்தையும் செடி விஷயத்தையும் சிந்தித்துப் பார்.

வேலன் — இரு, அதோ உன் தோட்டக்காரன் ஏதோ ஒரு தொட்டியைத் தூக்கிக்கொண்டு வருகிறானே, அதென்ன ?

வேங்கடேசன் — செங்கா, என்னடா அது ?

செங்கன் — அண்டை வீட்டு அம்மாள் நமது அம்மாளுக்குச் செடி கொடுத்து அனுப்பினார்கள். வாங்கிக்கொண்டு வருகிறேன்.

வேங்கடேசன் — ஏது, இந்தச் செடி அவர்கள் தோட்டத்தில் ஏராளமாக இருக்கிறதோ ?

செங்கன் — இல்லை, இன்னும் ஒரு சிறு கன்றுதான் இருக்கிறது ; அம்மாள் விரும்பியதாக அயல் வீட்டு எஜமானர் தெரிந்து, அதைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொடுத்தார். அம்மாள் கேட்டபோது, இது மிகவும் சிறிய செடியாக இருந்தமையால் கொஞ்சம் வளர்விட்டுக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தாராம். அதற்காகவே அதை ஒருவரும் தொடாமல் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி தோட்டக்கா-

ரனுக்குத் திட்டம் செய்தாராம், இப்போது பெரிய செடியை நமக்குக் கொடுத்துவிட்டு, சிறிய செடியைத் தாம் வைத்துக்கொண்டார்.

வேலன் — வேங்கடேசா, செடியைப் பற்றிய சந்தேகம் இப்போதாவது தீர்ந்துவிட்டதா — செய்கையைப் பார்த்தால் மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவராகவே காண்கிறதே.

வேங்கடேசன் — ஆம், அப்படித்தான் மதிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் குதிரையைப் பற்றிய குறை எப்படியாகுமோ தெரியவில்லை.

வேலன் — அதோ நிற்கிறானே, அவன் அவருடைய குதிரைக்காரன்தானே ?

வேங்கடேசன் — ஆமாம் ; அவன்தான் — முத்தன். அடே முத்தா, இப்படி வா. குதிரையை விற்றாயிற்றா ?! நான் கேட்டதற்குமேல் எவ்வளவு கிடைத்தது ?

முத்தன் — நல்ல விலைக்குத்தான் போயிற்று. ஐயா என் இஷ்டம் போல் விட்டிருந்தால் இன்னும் அதிக விலைக்கு விற்றிருக்கலாம். அவருக்கு அப்படிச் செய்ய இஷ்டமில்லை, சந்தையில் ஜட்கா வண்டிக்காரருக்கு விற்றுவிடச் சொன்னார்.

வேலன் — ஏன் ?

முத்தன் — குதிரை ஒழுங்குதான், சமயத்தில் மோசஞ் செய்யும். ஒரு சமயம் ஐயா அவசரமாக ரெயிலுக்குப் போகவேண்டி யிருந்தது. போய்க்கொண்டே யிருந்த குதிரை இடக்கு செய்ய ஆரம்பித்து விட்டது. பிறகு ரெயில் தவறி, அவசரமான வேலை யெல்லாம் கெட்டுவிட்டது.

அதுமுதல் அதை ஒழித்துவிட வேண்டுமென்று எண்ணிவிட்டார்.

வேங்கடேசன் — அப்படியா அது, அதனால்தான் நான் கேட்டதற்கும் கொடுக்கவில்லையோ?

முத்தன் — ஆமாம், ஐயா என்னிடம் சொன்னாரே, 'இந்தக் குதிரை அவருக்குச் சரிப்படாது, கெட்டது என்று தெரிந்திருந்தும் அவருக்குக் கொடுக்கக்கூடாது' என்று சொன்னார்.

வேங்கடேசன் — சரிதான், போய்வா.

வேலன் — குதிரையைப்பற்றி இப்போது என்ன நினைக்கிறாய்?

வேங்கடேசன் — என்ன நினைக்கிறது, அவை மிகவும் பெரிய மனிதரென்றே நினைக்க வேண்டும். அதற்கென்ன தடை. ஆனாலும் என் வேலைக்காரன் விஷயமாக அவர் செய்தது எனக்கு வெறுப்பு வெறுப்புதான்.

வேலன் — அவசரப்படுவானேன், அதையும் ஆராய்ந்து பார்த்தால் தெரிந்துவிடுகிறது. இத்தனை விஷயம் விளங்கிற்றே, இதுவும் விளங்காமற் போகுமா — வீரனும் அதோ வருகிறானே, நல்ல சமயந்தான்.

வேங்கடேசன் — இங்கே வரமாட்டான், நம்மைப் பார்த்தால் அப்படி ஒதுங்கிப் போய்விடுவான், பார்த்துக்கொண்டே இரு.

வேலன் — இல்லை, இல்லை நம்மிடந்தான் வருகிறான். தலை வணங்கி வருகிறானே தெரியவில்லையா?

வீரன் — (தரையில் விழுந்து கும்பிடுகிறான்) சாமி, என்னை மன்னிக்கவேண்டும். ஏழை, ஏதோ

தெரியாமல் எதிர்த்துப் பேசிவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.

**வேங்கடேசன்** — ஏது, புதிய எஜமானிடத்தில் இதற்குள் கசப்பு ஏற்பட்டுவிட்டது?

**வீரன்** — அப்படி ஒன்றுமில்லை. அவர் எனக்கு எஜமானுக இருந்ததில்லை. நான் அவரை வேலை கேட்டது உண்மைதான். அவர் எனக்குப் புத்திமதிகள் சொல்லி, 'இரண்டு நாள் இங்கே இரு. பிறகு போய் உன் எஜமானரிடம் சேர்- இவ்வளவு காலம் நீ அங்கே இருந்துவிட்டு, இப்போது நீ வேறிடம் போவது சரியல்ல' என்றார். இன்று கட்டாயம் போகவேண்டும் என்று தூண்டினர். எனக்கும் தங்களை விட்டு இருக்க மனம் பிடிக்கவில்லை, வந்துவிட்டேன்.

**வேங்கடேசன்** — சரி, உள்ளே போய் வேலைகளைப் பார்.

**வேலன்** — வேலைக்காரன் விஷயம் ஒன்றுதான் என்ருயே — இப்போது என்ன நினைக்கிருய்?

**வேங்கடேசன்** — பலவிஷயம் சொல்லிப் பயனில்லை. எனக்குப் புத்தி வந்தது. 'சந்தேகம் விபரீதம்' என்பது சரியான வாக்கியம். இனி ஒருவர் மீதும் அவநம்பிக்கை கொள்ள மாட்டேன். இவ்வளவு நல்ல மனிதரை அனுவசியமாக அவநம்பிக்கையால் அவமதித்து வந்தேன். இன்று உன்னால் எனக்கு அவர்மேல் இருந்த வெறுப்பெல்லாம் விருப்பாயிற்று. அதன் பொருட்டு உனக்கு வந்தனம் செய்கிறேன்.

**வேலன்** — சந்தோஷம், போய் வருகிறேன்.

## 12. தபால்

அயலூரிலுள்ள நமது உறவினருக்கும் நண்பர்களுக்கும் க்ஷேம சமாசாரங்களைத் தெரிவிக்க அடிக்கடி நிருபம் எழுதுகிறோம். அவர்களும் நமக்குக் கடிதம் எழுதுகிறார்கள். நாம் எழுதும் கடிதங்கள் எப்படிப் போய் அவர்களுக்குச் சேர்கின்றன? அவர்கள் எழுதும் கடிதங்கள் எப்படி வந்து நமக்குச் சேர்கின்றன என்பதை ஆராய்வோம்:

நாம் ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்வது போலவே கடிதங்களும் பிரயாணம் செய்கின்றன. நாம் ஓர் ஊருக்குப் போக விரும்பினால் வண்டியில் போகிறோம்; அதிக தூரமானால் ரெயில் மார்க்கமாகச் செல்கின்றோம். கடலுக்கு அப்புறமுள்ள பிரதேசங்களுக்குக் கப்பல் மூலமாகப் பிரயாணம் செய்கிறோம். இவ்விதமாகவே, நாம் எழுதும் கடிதங்களும் போய் அந்தந்த இடங்களிலுள்ள மனிதர்களிடத்தில் சேர்கின்றன.





ஒருவன் சென்னையிலிருந்து ஒரு கடிதம் எழுதி, பெங்களூரிலுள்ள ஒரு நண்பனுக்கு அனுப்புகிறான். அந்தக் கடிதம் எப்படிப் போய் பெங்களூரைச் சேர்கிறது என்பதைக் கவனிப்போம்: சென்னையிலுள்ளவன் தான் எழுதிய கடிதத்தை உறையிலிட்டு மூடி, அதற்குச் செலுத்தவேண்டிய கட்டணத்திற்காகத் தபால் தலை வாங்கி,

உறையின்மேல் ஒட்டி, தபாலாபீசுக்குக் கொண்டு போய், கடிதங்கள் போடுவதற்காக, அமைத்துள்ள



தபால் பெட்டியில் போடுகிறான். தபால் சேவகன் அந்தக் கடிதங்களை யெல்லாம் சேர்த்தெடுத்து, அந்த ஊரின் பேரும் தேதியும் காலமும் காட்டும் முத்திரையை அந்தத் தபால் தலையில் பதியும்படி குத்துகிறான்; பிறகு அந்தக் கடிதங்களை யெல்லாம் ஒரு பையில் போட்டுக் கட்டி, கட்டின முடியை ஒரு-



வரும் அவிழ்க்காதபடி அரக்கு முத்திரை யிட்டு, ஒரு வண்டியில் போட்டு, ரெயிலுக்கு அனுப்புகிறான். ரெயிலிலுள்ள தபால் உத்தியோகஸ்தன் அத் தபால் மூட்டையைப் பெற்றுக்கொள்ளுகிறான்.



ரெயில் தொடரில் தபாலுக்கென்று தனியே ஒரு வண்டி யுண்டு. அந்த வண்டியின் பலகைச் சுவரில்

அநேக அறைகள் உண்டு. தபால் உத்தியோகஸ்தர்கள், தம்மிடம் வந்து சேரும் கடித மூட்டைகளை



அவிழ்த்து, கடிதங்களை ஊர் வாரியாகத் தரம் பிரித்து, அறைகளிற் போட்டு, அந்தந்த ஊர்களுக்கான கடிதங்களை ஒன்று சேர்த்து, சிறு பைகளிற் போட்டுக் கட்டி, அங்கங்கே ரெயிலண்டை வரும் தபால்காரனிடம் கொடுப்பார்கள். அவன் அதைப் பெற்றுக்கொண்டு தன் ஊருக்குப் போவான்.

இப்படியே பெங்களூருக்குப் போட்ட கடிதமும் பெங்களூருக்குப் போய்ச் சேரும். தபால் மூட்டை பெங்களூர் தபாலாபீஸைச் சேர்ந்தவுடன், தபால் உத்தியோகஸ்தர் அந்த மூட்டையைப் பிரித்து, அதிலுள்ள கடிதங்களை எடுத்து தபால்காரனிடம் கொடுப்பார். தபால்காரன் அந்தக் கடிதங்களின்மேல் ஒரு முத்திரை இடுவான். அந்த முத்திரையில் அந்த ஊரின் பேரும் தேதியும் மணியும் பதிந்திருக்கும். இதோ இந்தக் கடிதத்தைப் பார், இதன்மேல் இரண்டு முத்திரைகள் இருக்கின்றன. ஒன்று சென்னையிலிட்ட முத்திரை, ஒன்று பெங்களூரில் போட்ட முத்திரை. பிறகு அந்தக் கடிதங்களை தபால்காரன் எடுத்துக்கொண்டு போய், விலாசத்தின்படி அவரவர்களுக்-



குச் சேர்ப்பான். இதுதான் கடிதங்கள் போய்ச் சேரும் முறை. இப்படியே கப்பல் மூலமாகவும் கடிதங்கள் செல்கின்றன.

## 13. பட்சிகளின் அலகுகள்

பட்சிகளின் பாதங்கள் அவற்றின் வாழ்க்கைக்கும் வசிக்கும் இடங்களுக்கும் ஏற்றவாறு அமைந்திருக்கும் விஷயத்தை மூன்றாம் வகுப்பில் வாசித்திருக்கிறீர்கள். இப்போது அவற்றின் அலகுகளும் அவ்வாறே அமைந்திருக்கும் உண்மையை இங்கே ஆராய்வோம்:

**மாமிச பட்சணிகள்** — வல்லூறு, பருந்து, கருடன், ராஜாளி முதலிய பறவைகள் இந்த இனத்தைச் சார்ந்தவை. இவற்றின் அலகுகள் மிகவும் உறுதியாய் நீண்டு முனை வளைந்திருக்கும். இவைகளுக்குக் குரூரமும் கூர்மையும் உள்ள பார்வை யுண்டு. இவை வேறு பறவைகளைப் பறக்கும்போதே தம் பாதங்களால் பற்றிக் கொண்டுபோய் அலகினால் கிழித்துத் தின்னும். தரையில் மேயும் கோழிக்குஞ்சு முதலிய சிறிய பறவைகளையும் ஆகாயத்தினின்றும் பாய்ந்து வந்து அடித்துக் கொண்டுபோகும். மற்றப் பறவைகள் அஞ்சி நடுங்கத்தக்க பராக்கிரமம் இவைகளுக்கு ஏற்பட்டு இருப்பதனால், இந்த இனத்துப் பறவைகளுக்குப் 'பக்ஷி ராஜா' என்னும் பெயர் வழங்குகின்றது.



IB P31,J9(4) NK 83395

ஆந்தையும் இந்த இனத்தைச் சேர்ந்ததே. ஆந்தைக்குப் பகலில் நன்றாய்க் கண் தெரியாது. அது பகலெல்லாம் மரப் பொந்துகளிலும் சுவர்த் தொளைகளிலும் மறைந்திருந்து, இரவில் வெளிவந்து இரை தேடுகிறது. ஆந்தை, வயலெலி, தவளை முதலிய சிறு பிராணிகளைக் கொன்று தின்னும். இதன் அலகும் குறுகி வளைந்து, மாமிசத்தைக் கிழிப்பதற்கு ஏற்றதாக முனை கூர்மையாய் இருக்கிறது.





மீன் குத்திப் பறவைகள் — மீன்குத்தி ஒன்றே இந்த இனத்திற் சேர்ந்தது. இந்தப் பறவைக்கு அலகு நீண்டு கூராக இருக்கும். மீன் குத்தி, நீர் நிலைகளுக்கு மேல் நிலைத்துப் பறந்துகொண்டே யிருந்து, தண்ணீரின் மேல்மட்டத்திற்கு வரும் மீனை, அதி

வேகமாகப் பாய்ந்து பற்றிக்கொள்ளும். தண்ணீரிலுள்ள ஜந்துக்களை மேலே யிருந்து பார்க்கும் சக்தி இதற்கு அதிகம்.



சதுப்புநிலப் பறவைகள் — கொக்கு, நாரை முதலிய பட்சிகள் சதுப்பு நிலங்களில் அசைவற்றுத் தங்கி யிருந்து, தம் பக்கமாக வரும் மீன் தவளை முதலிய ஜல ஜந்துக்களைப் பிடித்துத் தின்னும்.

'ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு'

என்னும் பாட்டை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

மரங் குத்திப் பறவைகள் — மரங்குத்தி யென்னும் ஒருவகைப் பறவைமட்டும் இந்த இனத்தைச் சேர்ந்தது. இதில் பெரிதும் சிறிதுமான இரண்டு வகைகள் உண்டு. இந்தப் பறவை செங்குத்தான மரத்தில் அடி-முதல் நுனி வரையில் அதி விரைவாக நடந்து செல்லும். இப்படி நடப்பதற்கு இதன் வாலும் உதவியாக இருக்கிறது. செல்லும் பொழுதே அலகினால் கொத்திக்கொண்டு போய் மரப்பட்டைக்குள் புழு பூச்சிகள் தங்கியிருக்கும் இடத்தை உணர்ந்து, அங்கே தன் நீண்டு உறுதியான அலகைச் செலுத்தி, அங்குள்ள பூச்சிகளைத் தன் நாக்கினால் தொட்டு இழுத்து விழுங்கும். இப் பறவையின்



நாக்கு மிகவும் மெல்லியதாய் நீண்டு நன்ருய் வளையக்-கூடியதாய் பிசின் போன்ற பசையுடையதாய் இருப்-பதனல், மரத்தின் இடுக்கிலுள்ள சிறு பூச்சிகளையும் இப்-பறவை வெகு சுலபமாகப் பற்றிக்-கொள்ளும். இதன் நாக்கின் நுனியிலுள்ள ஒரு-வகை முள்போன்ற அவயவமும் ஆகாரம் தேடுவதில் இப் பறவைக்கு அநுகூலமாக அமைந்திருக்கிறது.



தட்டை அலகுள்ள பறவைகள்—குள்ளவாத்து, தாரா முதலிய பறவைகள் இந்த வகையிற் சேரும். இவற்றின் அலகுகள் மற்றப் பறவைகளின் அலகு-கள்போல் இராமல் அகன்று நீண்டிருக்கின்றன. இவற்றின் அலகுகள் மிருதுவாகவும் கொஞ்சம் வளைக்கக் கூடியவைகளாகவும் இருக்கும். இவற்றின் அலகு-களைத் திறந்து பார்த்தால், மேலும் கீழும் ஓரங்களில் சீப்-பின் பற்கள் போன்ற சிறிய பற்கள் வரிசையாக அமைந்-திருக்கின்றன. நாக்கும் அண்-ணமும் அமைப்பாகப் பொரு-ந்தியிருப்பதனல் இரையிலுள்ள சேறு முதலியவற்-றைப் பிழிவதற்கு ஏற்றதாக இருக்கிறது. இந்த ஜாதிப் பறவைகள் நீரிலும் சேற்றிலுமுள்ள மீன் நண்டு முதலியவைகளையும் புழு பூச்சிகளையும் பற்றி முள்போன்ற பற்களால் அழுத்திக் கொன்று விழுங்-கும். இரையைப் பிடிக்கும்போது அதனுடன் வரும்



சேறும் நீரும் அலகின் இரு பக்கங்களிலுமுள்ள வாய்க்கால்களின் வழியே கழிந்து விடும்.

கோட்டை உடைத்துத் தின்னும் பறவைகள் — பச்சைக் கிளி, வெள்ளைக் கிளி, பஞ்சவர்ணக் கிளி முதலானவை இவ் வினத்தைச் சேர்ந்தவை. இதன் மேலலகு மிகவும் வளைந்து நுனி வெகு கூர்மையாக இருப்பதோடு இரண்டு பக்கங்களும் கத்திபோல் கூராக இருக்கின்றன. அடியலகு தடித்துப் பருத்து மேலலகைவிடச் சிறுத்து அகன்றிருக்கிறது. இந்தப் பறவைகள் பெரும்பாலும் கொட்டைகளை உடைத்து அவற்றின் உள்ளிருக்கும் பருப்புகளைத் தின்னப் பிரியப்படும்; காய் கனிகளை நன்றாய்க் கோதித் தின்னும்.



தானியம் கொரிக்கும் பறவைகள் — ஊர்க்குருவி, தூக்கணாங்குருவி முதலிய பறவைகள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. இந்த இனத்துப் பறவைகளின் அலகுகள் மிகவும் உறுதியானவை. அவை குட்டையாய் முனை குவிந்து தடித்திருக்கும். இந்தப் பக்ஷிகள் தானியங்களைக் கொரித்து உமியையும் மேல் தோலையும் போக்கி, மணியைமட்டும் விழுங்கும்.



தானியம் விழுங்கும் பறவைகள் — பலவகையான புறாக்கள் இந்த இனத்திற் சேர்ந்தவை. புறாவின் அலகு கொஞ்சம் நீண்டு மிகவும் மிருதுவாயிருக்கிறது. இவ்வினத்துப் பக்ஷிகள் தானியங்களை

அப்படியே விழுங்கக்கூடியவை. அன்றியும் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கக்கூடிய தன்மையுமுண்டு. வேறெந்தப் பக்ஷியும் இப்படித் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க முடியாது.



சீய்த்துக் குத்தித் தின்னும் பறவை—இந்த இனத்தில் பலவகைக் கோழிகள், மயில், கவுதாரி முதலிய பக்ஷிகள் சேரும். இந்தப் பக்ஷிகள் இரையைக் கால்களால் சீய்த்துக்கொண்டே அலகினால் குத்தியெடுத்துத் தின்னும். இவற்றின் அலகுகள் குறுகி, முனை குவிந்து வளைந்து, மிகவும் உறுதியாய் இருக்கின்றன.



எல்லாவற்றையும் தின்னும் பறவை — காக்கை இந்த இனத்தில் சேர்ந்தது. காக்கை கண்டதையெல்லாம் தின்னும் என்பது உனக்குத் தெரியுமே. மச்ச மாமிசங்களையும் தானிய முதலியவற்றையும் குத்தித் தின்னும்படி காக்கையின் அலகு இரும்புத் தகட்டைப்போல் உறுதியாக நீண்டு முனையில் சிறிது வளைந்து இருக்கிறது.



தேன் உறிஞ்சும் பறவை — தேன்சிட்டு என்னும் சிறு பறவை இந்த வகையிற் சேர்ந்தது. இது பறந்துகொண்டே (உட்காராமலே) தன் நீண்ட அல-

கினுல் பூவிலுள்ள தேனைக் கிரகித்துக்கொள்ளும் திற-மையுடையது. அதனுல், இதன் அலகு நீண்டு மெல்-



லியதாகவும் கூர்மையாகவும் வளைந்தும் இருக்கும். ஹங்காரப் பறவைக்கும் இந்த வல்லமை யுண்டு.

பறந்துகொண்டே இரை உட்கொள்ளும் பறவை-ததைலம் என்னும் பறவை இவ்வினத்திற் சார்ந்தது.



இது மாலைக்காலத்தில் சுமார் முப்பது நாற்பது அடி உய-ரத்தில் வெகு வேகமாய் சுற்-றிச் சுற்றிப் பறந்துகொண்டே யிருக்கும். இந்தப் பக்ஷி பற-க்கும்போது இதற்குத் தலை இருப்பதாகவே தெரியாது. சிறுவர்கள் இதைத் தலையில்லாக் குருவி என்பார்-கள். இது ஏன் அப்படிப் பறக்கிறது தெரியுமா —

இரை தேடுவதற்காகத்தான். இதற்கு வாய் மிகவும் அகன்று இருக்கும். இது, தன் வாயைத் திறந்து-கொண்டு அதிவேகமாகப் பறப்பதனால், மாலைக் காலத்தில் கூட்டமாகப் பறக்கும் ஈ, கொசு முதலிய ஜந்துக்கள் இதன் வாய்க்குள் அகப்பட்டு இரையாகின்றன. இப்படிச் செய்வதனால் இதற்கு 'ஆகாய வலை' என்னும் பெயர் ஆங்கிலேயர் வழங்குகிறார்கள்.

இவ்வாறே ஒவ்வொரு பறவையும் தனக்கு வேண்டிய ஆகாரம் முதலியவற்றைத் தேடிக்கொள்-வதற்கு அனுகூலமாகக் கடவுள் அததற்குத் தகுந்த உறுப்புக்களை அமைத்திருக்கிறார். அக் கடவுளது அறிவையும் ஆற்றலையும் எடுத்துக்கூற எவரால் ஆகும்!

## 14. நீர்ப்பாசனம்

நம் உயிர் வாழ்க்கைக்கு உபயோகமான உணவுப் பொருள்களை வயல்களில் பயிரிடுகின்றோம். அந்த வயல்கள் நன்செய் என்றும் புன்செய் என்றும் இரு வகைப்படும். நன்செய்க்கு நீராதாரம் அதிகமும் வேண்டும்.

நமது நாட்டில் வயல்களுக்கு ஏற்பட்டிருக்கும் நீராதாரங்களை இங்கு ஆராய்வோம்: ஜலத்திற்கு மழையே முக்கிய ஆதாரம். மழை சதா பெய்து-கொண் டிருப்பதில்லை. காலத்திற் பெய்யும் மழை சிற்சில இடங்களில் ஆறுகளாகக் கூடி ஓடுகின்றன. அந்த ஆற்று நீரைக் கிருஷிகர்கள் கால்வாய்களின் மூலமாகக் கொண்டுபோய் வயல்களுக்குப் பாய்ச்-

சிக்கொள்ளுகிறார்கள். ஆற்றுநீர் நேரே பாயும் வயல்களுக்கு 'ஆற்றுப் பாய்ச்சல் நிலம்' என்று பெயர். இந்த நிலங்களுக்குப் பெரும்பாலும் நீர்க் குறைவு நேராது. ஆற்றுப்பெருக்கு அற்ற காலத்திலும் கிருஷிகர்கள் ஆற்றின் அகட்டில் கால் வெட்டி, அங்கே ஊறும் நீரைக் கொண்டுபோய் வயல்களுக்குப் பாய்ச்சிக்கொள்வார்கள்.

சில இடங்களில் ஆற்றுக்கு அணை கட்டித் தண்ணீரைத் திருப்பி, அடுத்துள்ள ஏரிகளில் பாய்ச்சித் தேங்கவைத்து, மதகின் மூலமாகக் கால்வாய் வழியே கொண்டுபோய் வயல்களுக்குப் பாய்ச்சிக்



கொள்வார்கள். ஆற்றுநீர் ஆதாரமில்லாத ஏரிகள் மழைநீரினால் நிறைந்து கொஞ்ச காலம் பாய்வதற்கு அனுகூலமாக இருக்கும். இப்படிப்பட்ட வயல்களுக்கு 'ஏரிப் பாய்ச்சல் நிலம்' என்று பெயர்.

ஏரியில் தண்ணீர் அருந்தட்டலாக இருக்கும்போது, கிருஷிகர்கள் குளம், துரவு, கிணறு முதலிய நீர்நிலைகளினின்றும் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சிக் கொள்வார்கள். குளம் குட்டைகளில் தண்ணீர் மேலாக இருந்தால் கையேற்றம் போட்டு இறைப்பார்கள். கிணறு முதலான நீர்நிலைகளில் தண்ணீர் ஆழத்தில் இருந்தால் பெரிய ஏற்றம் போட்டு இறைப்பது வழக்கம். பெரிய ஏற்றத்திற்குப் பதிலாகச் சில இடங்களில் கபிலை யேற்றம் போட்டு இறைப்-





பது உண்டு. கபிலை யேற்றம் என்பது எருதுகள் கட்டி இறைக்கும் ஏற்றம்.

சில இடங்களில் இறைகூடையால் தண்ணீர் இறைப்பதுண்டு. கால்வாயில் தண்ணீர் போகும்போது, வயல், தண்ணீர் மட்டத்திற்குச் சிறிது உயரத்தில் இருந்தால் இறைகூடையால் இறைத்துக் கொள்ளலாம். வயல் அதிக உயரத்திலிருந்தால் இப்படிச் செய்ய முடியாது. அப்போது கையேற்றம் போட்டே இறைக்க நேரிடும்.



கிருஷிகர்கள் இவ்வாறெல்லாம் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி, உணவுப் பொருள்களை விளையச்செய்கிறார்கள். கால மழை பெய்து, ஆறுகள் ஓடி, ஏரி குளங்கள் நிரம்பினால் எங்கும் க்ஷேமம் உண்டாகும். ஆறு ஏரி முதலிய ஜலாதாரங்கள் இல்லாத இடத்தில், குடிகள், குளம் கிணறு முதலிய நீர்நிலைகளிலிருந்து கஷ்டப்பட்டு இறைத்துப் பயிரிட நேரிடுகின்றது.

## 15. கோசுகு

இதோ பறக்கிற ஜந்துவைப் பார். அது இன்ன-தென்று உனக்கு முன்னமே தெரியும். இராத்திரி-யில் வந்து, சதா நமக்குத் துன்பம் செய்யும் ஜந்து இன்னதென்று உனக்குத் தெரியா திருக்குமா — கொசுகு என்னும் ஜந்து மிகவும் கொடியது. பார்-வைக்கு மாத்திரம் அழகாக இருக்கிறது செய்யும் காரியமோ ஒருவருக்கும் சம்மதமாக இராது. கொசுகு தம்மைச் சுற்றிக் கூட்டங் கூடி இருக்க-வேண்டும் என்று எண்ணுவோர் உலகத்தில் எவ-ரேனும் இருப்பரோ!

கொசுகு ஒரு நிமிஷமும் நம்மைச் சும்மா விடுவதில்லை; எந்நேரமும் தொந்தரவு செய்கிறது. நம்முடைய ஜோலிக்கு அது வாராவிட்டால், நாம் ஏன் அதன் பேச்-சுக்குப் போகப்-போகிறோம். அது செய்வது இரண்டு விஷயம். இரவா-னதும் எந்நேரமும் பாடிக் கொண்டே இருக்கும்; இல்லா-



விட்டால் நம்மைக் கடித்து இரத்தம் குடிக்கும். இந்த இரண்டு காரியங்களும் நமக்குச் சம்மதப்-படுவதில்லை. அது கடித்தால்தான் நமக்கு உபத்-திரவம் உண்டாகிற தென்றாலோ பாடினாலும் கேட்கப் பிடிப்பதில்லை. கொசுக்கள் அதிகமாக இருந்தால் அருகில் அசுத்த ஜலம் தேங்கியிருக்கிற தென்று தெரிந்து கொள்ளலாம்.

கொசுகைப்பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானல் தண்ணீர் தேங்கியுள்ள ஊத்தைக் குட்டைகளே ஏற்ற இடம். அங்கே போய் அது முதலில் எப்படி உற்பத்தியாகிறது என்பதைக் கவனிப்போம்.

இதோ பார், பழுப்பு நிறமான துண்டு ஒன்று தண்ணீரின் மேல் மிதக்கிறது. அது என்ன தெரியுமா — கொசுகின் முட்டைகள் ஒரு துரும்பில் ஒன்ருகச் சேர்ந்து ஒட்டிக்கொண்டு ஒரு படகு போல் மிதந்து வருகின்றன. கொசுகு போய் தன் முட்டைகளைத் தண்ணீரின் மேல் இடுவதென்ருல், விந்தையாகத்தான் இருக்கிறது. அதன் சங்கதி அதற்குத் தெரியாதா — தெரியாமலா தண்ணீரின்மேல் முட்டையிட்டு இருக்கிறது.

சில நாட்களுக்குப் பிறகு இந்த முட்டைகளிலிருந்து சதா ஆடுகிற வால் தோன்றுகிறது. பிறகு அவை முட்டைகளின் அடிப்புறமாகச் சிறிய புழுப்போல் வெளிப்படுகிறது. அவைகள் தண்ணீரின் மேல் தவழ்ந்து செல்வதை நன்ருகக் கவனித்துப் பார். எவ்வளவு விசித்திரமாக இருக்கின்றது. ஒவ்வொரு வாலின் முனையிலும் மயிர் முளைத்திருக்கின்றது. அந்த மயிரின் வழியாகத்தான் அந்தக் காலத்தில் கொசுகு மூச்சு விடுகிறது. இது எவ்வளவு ஆச்சரியம், மூக்கிற்குப் பதிலாக வாலில் உள்ள மயிர் உபயோகப் படுகிறதே. கொசுகுப் புழு தண்-



ணீரின் உள்ளிருந்து மேலே வருவதைப் பார்த்தால் வெகு வேடிக்கையாக இருக்கும். வாலைத் தலையண்டைக் கொண்டு வளைத்து உதைத்துக் கொண்டே மேலுக்கு வரும். கொசுகுக் கூட்டின் மேல்தோல் தண்ணீரின்மேல் மிதப்பதை நீ பல இடங்களில் பார்த்திருப்பா யல்லவா.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அந்த ஜந்துக்கள் மாறுதல் அடைகின்றன. அந்த ஜந்துக்களுள்ள தண்ணீரை அலைத்தால், அவை அலைந்து அலைந்து தண்ணீரின் அடிமட்டத்திற்குப் போய்விடுகின்றன. பிறகு அவை தம் தோலை உரித்துக்கொண்டு முழு உருவமுள்ள கொசுக்களாக வெளியே வருகின்றன. அவை தண்ணீரிலிருந்து வெளியே வந்த பின் தம் இரக்கைகளை உலரவைக்கும்போது வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அந்தச் சமயத்தில் அது தண்ணீரில் விழுந்துவிட்டால், உள்ளே மூழ்கிவிடும். முதலில் தாம் உற்பத்தியான இடமே அவைகளுக்கு மரண ஸ்தானமாகிவிடும். இதுவும் ஒரு விந்தை யல்லவா!



இரக்கை உற்பத்தியாகி வெளிவந்ததும் கொசுக்களுக்குத் தம்மைப் போஷித்துக் கொள்வதற்கு வேண்டிய அவயவங்கள் எல்லாம் பூர்த்தியாக அமைந்திருக்கின்றன. தொளைக்கவும் உறிஞ்சவும் வேண்டிய அவயவங்களும் ஏற்பட்-

டிருக்கின்றன. முட்டையி லிருந்து வெளிவந்ததும் ஆண் கொசுக்கள் செடிகளிலுள்ள ரசத்தை உறிஞ்சி உண்கின்றன. பெண் கொசுக்கள் மிருகங்களையாவது மனிதரையாவது கடித்து இரத்தத்தை உறிஞ்சியுண்டு ஜீவிக்கின்றன. கொசுகு நம்மைக் கடிப்பதனால், நமக்கு ஒருவகைக் காய்ச்சல் உண்டாகிறது.

இதோ ஒரு கொசுகு வெளியே வரச் சித்தமாக இருக்கிறது. வந்ததும் நம்மைக் கடிக்கும். கொசுகு வந்தால் நாம் என்ன செய்வது, அதை விட்டு ஒழிந்து போக வேண்டும், அல்லது அதை மூட்டம் போட்டுக் கொல்லவேண்டும்.

கொசுகின் பிறப்பு வளர்ப்பு மிகவும் விந்தையாகத்தான் இருக்கிறது. கொசுகு மிகவும் சுறுசுறுப்பானதுதான்; ஆனால், அதற்கு நம்மிடத்தில் கொஞ்சமும் அன்பு கிடையாது. அதனால் அது கண்டவிடத்தில் உதைபட்டு இறந்து போகின்றது. எங்கே இருந்தாலும் மனிதர் அதை ஒழிக்க வழி தேடுகிறார்கள்.

## 16. சூடு பெருகச் செய்யும் குளிர்ச்சி இறுகச் செய்யும்

பிள்ளாய், இங்கே வா, இந்தக் கருமான் செய்யும் காரியத்தை நன்றாய்க் கவனி. ஒரு வண்டிக்காரன் தன் வண்டிச் சக்கரத்தின் கட்டு விட்டுப்போயிற்று என்று அதைக் கருமானிடம் கொண்டு வந்திருக்கிறான். கருமான் அதை என்ன செய்கிறான் பார். கட்டு என்பது சக்கரத்தைச் சுற்றி அழுத்தமாக

இணைக்கும் ஓர் இரும்புத் தகடு. அது சுமார் இரண்டு அங்குல அகலத்தில் சக்கரத்தின் சுற்றளவுக்கு ஏற்ற நீளமுள்ளதாக இருக்கிறது. கட்டு விட்டுப்போனல், விட்ட வாயைப் பற்றவைத்து, அந்தக் கட்டு, சக்கரத்தின் விளிம்பில் நன்ருய்ப் பொருந்தும்படி இணைப்பது கருமானுடைய காரியம். இதற்குக் கருமான் என்ன செய்கிருன் என்பதைக் கவனி.



முதலில் கட்டுக் கம்பியின் இரண்டு முனைகளையும் உலைவாயில் வைத்துப் பழுக்கக் காய்ச்சி அவற்றைப் பொருந்தவைத்து, சம்மட்டியால் அடித்து இணைத்து விடுகிருன். அப்போது அந்தத் தகடு சரியான வட்ட வடிவை அடைகிறது. பிறகு அதைப் பூமியில் படுக்க வைத்து, சுற்றிலும் எருமுட்டைகளை அடுக்கி, தீயிட்டுக் கொளுத்துகிருன். அது நன்ருய் காய்ந்து பழுத்த பிறகு, இரண்டு பேர் எதிரெதிராக நின்று, கட்டைக்

குரட்டினால் பற்றி எடுத்து, சக்கரத்தின் விளிம்பில் அணையும்படி வைத்து இழுத்துப் பிடித்து அடித்து பொருத்தி விடுகிறான். அப்போது அந்தக் கட்டு, தகர டப்பிக்கு மேல்மூடி பொருந்துவதுபோல் சக்-



கரத்தில் அமைந்துவிடுகிறது. உடனே, சாணியைத் தண்ணீரில் கரைத்து சக்கரத்தைச் சுற்றிலும் கட்டின் மேல் ஊற்றுகிறான். அப்போது அந்தக் கட்டு சக்கரத்தின் விளிம்பை இறுகப் பற்றிக்கொள்கிறது. இப்படிக் கட்டைக் காய்ச்சுவானேன்? பிறகு தண்ணீர் ஊற்றுவானேன்? என்று உனக்குச் சந்தேகம் உண்டாகும். அதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள்:

கட்டுக் கம்பியின் இரண்டு முனைகளையும் பொருந்த இணைத்துச் சக்கரத்தைச் சுற்றித் தொடுத்து விட்டால், கட்டு நின்றுவிடுமா? நிற்காது. ஏன்? கட்டு, சக்கரத்தைச் சுற்றி மிகவும் அழுத்தமாகப்

பொருந்தியிராது. பொருந்தினலும் சக்கரம் பூமி-யின்மேல் உருளும்போது, கட்டு சுழன்று கீழே விழுந்துவிடும். அதற்காகத்தான் கருமான் அதைச் சுற்றிலும் காய்ச்சி சக்கரத்திற் பொருத்துகிருன்.

இதில் நாம் கவனிக்கத்தக்க விஷயம் இரண்டு உண்டு. கட்டைச் சக்கரத்தின் விளிம்பில் பொருத்-துவதற்கு அந்த வட்டம் கொஞ்சம் பெருகவேண்-டும்; பிறகு அது மரத்தோடு மரமாகப் பொருந்துவ-தற்குக் கொஞ்சம் இறுகவேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் செய்வது எது? இரும்புத் தகட்டை நெருப்பிலிட்டுக் காய்ச்சியபோது அது கொஞ்சம் பெருகி யிருக்கவேண்டும்; அதைச் சக்கரத்தோடு பொருத்தி அதன்மேல் தண்ணீர் விட்டபோது அத் தகடு கொஞ்சம் இறுகி யிருக்கவேண்டும் என்பது நமக்கு விளங்குகிறது. இதனல் பதார்த்தங்கள் சூட்-டையடைந்தால் பெருகுகின்றன என்பதும் குளிர்ச்-சியை அடைந்தால் இறுகுகின்றன என்பதும் விளங்கு-கின்றன. இரும்பு ஒரு கனபதார்த்தம்; இதை நெருப்பி லிட்டுக் காய்ச்சிச் சூடேற்றியபோது பெரு-கிற்று. அதன்மேல் தண்ணீர் விட்டு குளிரச் செய்த-போது இறுகிவிட்டது. இதனல் கருமான் கட்டுக் காய்ச்சி விடுவதற்கு இப்படிச் செய்கிருன்.

கனபதார்த்தம் மாத்திரமே இப்படியாகிறது என்று எண்ண வேண்டாம். திரவ பதார்த்தம், வாயு பதார்த்தம் ஆகிய மற்ற இரண்டு பதார்த்தங்களும் சூட்டைப் பெற்ற காலத்தில் பெருகுவதும் குளிர்ச்-சியைப் பெற்ற காலத்தில் இறுகுவதும் ஆகிய தன்-மைகளை அடைகின்றன. அவற்றையும் இங்கே விவ-ரிப்போம்:

வீட்டில் பால் காய்ச்சுவதைப் பார்த்திருக்கிருயா? என்ன செய்கிருர்கள்? பாலை ஒரு பாத்திரத்திலிட்டு, அடுப்பின்மேல் வைத்து, தீயிலிட்டுக் காய்ச்சுகிருர்கள். பால் காயும்போது பொங்கிப் பாத்திரத்தின் மேலே வந்து வழியப்பார்க்கிறது. உடனே கொஞ்சம் தண்ணீர் தெளித்தால் பொங்கிய பால் தணிந்து உள்ளடங்குகிறது. இதற்குக் காரணம் யாது? திரவ பதார்த்தமாகிய பால் சூட்டை யடைந்தபோது, தனக்குள்ள இடம் போதாமல் பொங்கிப் பெருக ஆரம்பித்தது; தண்ணீர் பட்டுக் குளிர்ச்சியை அடைந்தவுடனே சுருங்கி இறுக ஆரம்பித்தது. இதற்கு இன்னெரு திருஷ்டாந்தங் காட்டுகிறேன் பார்:



இந்தக் கண்ணடிக் குழையில் பாதியளவுக்குத் தண்ணீர் ஊற்றுகிறேன். அதில் சிறிது சிவப்பு மை சேர்க்கிறேன். இப்போது தண்ணீரின் அளவு

நன்ருய்த் தெரிகிறது. இதோ இந்தக் கண்ணுடிக் குவளையில் வெந்நீர் இருக்கிறது, அடுத்த குவளையில் தண்ணீர் இருக்கிறது. செந்நிறத் தண்ணீருள்ள இந்தக் குழாயை முதலில் வெந்நீரில் வைக்கிறேன், என்ன நடக்கிறது, பார். குழாயிலுள்ள தண்ணீர் கொஞ்சம் மேலே ஏறுகிறது. பிறகு அதையே தண்ணீரில் வைக்கிறேன். இப்போது என்ன ஆகிறது. குழையிலுள்ள நீர் முதலில் ஊற்றிய அளவிற்கே வந்து விட்டது. இப்படியே சாதாரண ஜலத்திலுள்ள சூட்டை அகற்றிவிட்டால் இது இறுகிப் பனிக்கட்டி யாகிவிடும். அதி சீதளதேசங்களில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாக மாறிவிடுகின்றது. இதனல் திரவ பதார்த்தமும் சூட்டை அடையுங் காலத்தில் பெருகுகிறது என்பதும் குளிர்ச்சியை யடையுங் காலத்தில் இறுகுகிறது என்பதும் விளங்குகின்றன.

இனி வாயு பதார்த்தத்தைப் பற்றிக் கவனிப்போம். மேகங்கூடி மழை பெய்யும் விதத்தைக் கவனித்தால் இந்த விஷயம் விசதமாகும். தண்ணீரில் வெப்பம் தாக்குவதால், அந்த நீர் ஆவியாக மாறி, மேலே சென்று, சூடு ஆறியவுடன் அந்த ஆவி மேக ரூபத்தை யடைந்து, குளிர் காற்றுப் பட்டவுடன், மழையாகப் பெய்கின்றது. தண்ணீர் சூடடைந்து நீராவியாகும்போது அது அதிக இடம் பெற்றுப் பரவிப் பெருகுகின்றது. அந்த ஆவி குளிர்ச்சி யடைந்தால் இறுகித் தண்ணீராக மாறுகின்றது. இப்படியே வாயு பதார்த்தங்கள் எல்லாம் சூட்டை யடைந்தால் பெருகும், குளிர்ச்சியை யடைந்தால் இறுகும்.

மேலே கூறிய விஷயங்களால் திட திரவ வாயு பதார்த்தங்கள் மூன்றையும் அநேகமாக சூடு பெருகச் செய்யும் என்பதும் குளிர்ச்சி இறுகச் செய்யும் என்பதும் நமக்கு விளங்குகின்றன. அதனால் சூடு பெருகச் செய்யும் குளிர்ச்சி இறுகச் செய்யும் என்னும் பிரமாணம் உலகில் ஏற்பட்டு இருக்கிறது.

## 17. ஐக்கியக் கோடி (யூனியன் ஜாக்)

நாம் ஒரு கோயிலுக்குப் போனால் முன்பு கோபுரத்தைத் தரிசிக்கிறோம். உள்ளே சென்றால் எதிரில் கொடிமரம் ஓங்கி நிலைத்திருக்கக் காண்கிறோம். சில கோயில்களுக்குக் கோபுரம் இல்லாமற் போனாலும், கொடிமரம் இல்லாமற் போகாது. கொடிமரத்தைத் 'துவஜ ஸ்தம்பம்' என்றும் கூறுவதுண்டு. ஆண்டவனுடைய ஆணையைக் காட்டுவதற்குக் கொடிமரம் முக்கியமான அறிகுறியாக விளங்குகின்றது.

அரசர்களுடைய ஆணையைக் காட்டுவதும் அவரவர்கள் கொண்ட கொடிகளேயாம். முற்காலத்தில் இந்தத் தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியர் என மூன்று பெரிய அரசர்கள் இருந்தார்கள். அவர்களில், சேரர் விற் கொடியையும், சோழர் புலிக் கொடியையும், பாண்டியர் மீனக் கொடியையும் மேற்கொண்டு இருந்தனர்.

இப்படியே பாரதம் முதலிய நூல்களில் கூறும் அரசர்களும் தமக்கென வெவ்வேறு கொடிகளைக் கொண் டிருந்தனர். தருமருக்கு முரசக் கொடி,

அர்ஜுனனுக்கு அனுமக் கொடி, துரியோதனனுக்கு அரவக் கொடி என அவரவர்கள் விரும்பியவாறு கொடிகளை மேற்கொண் டிருந்தனர்.

இந்தக் காலத்திலும் ஒவ்வொரு தேசத்து அரசரும் ஒவ்வொரு கொடியை அறி குறியாக வைத்திருக்கின்றனர். கடவுளுக்கு ஆலயம் அமைந்திருப்பது போல, காவலருக்குக் கோட்டைகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கோட்டையிலும் ஒரு கொடிமரம் உண்டு.

நம்மை அன்புடன் ஆண்டு பாதுகாத்துவரும் பிரிடிஷ் ராஜ்யத்தின் கொடிக்கு ஐக்கியக் கொடி என்று பெயர். இதை அங்கில பாஷையில் யூனியன் ஜாக் (Union Jack), என்று கூறுவர். 'யூனியன்' என்றால் ஐக்கியம், அதாவது ஒன்று சேர்ந்தது என்பது பொருள். இதனால் ஐக்கியக் கொடி, பல கொடிகள் ஒன்று சேர்ந்து உண்டானது என்பது விளங்குகிறது. அதன் விவரத்தை இங்கு விளக்குவோம்:

இந்த ஐக்கியக் கொடியை உற்றுக் கவனித்தால் இதில் மூன்று சிலுவைகள் ஒன்றுகூடி அமைந்திருப்பதாகத் தெரியும். சிலுவை என்பது கிறிஸ்தவ மதஸ்தர் மேற்கொள்ளும் ஓர் அடையாளம். அது சாதாரணமாக + கூட்டல் குறியைப்போல் இருக்கும். ஐக்கியக் கொடியில் மூன்று சிலுவைக் குறிகள் ஏற்பட்டதன் காரணத்தைக் கவனிப்போம்.

பிரிடிஷ் ராஜ்யத்திற்குத் தாயகமாக விளங்கும் 'கிரேட் பிரிட்டன்' (Great Britain) என்னும் தேசம் மூன்று பிரிவினை யுடையது. அவை — இங்கிலந்து, ஸ்காத்லந்து, அயர்லந்து என்பனவாம். முற்காலத்-

# UNION JACK



1



2



3

| | | |
|---|---|---|
| ஸென்ட் | ஸென்ட் | ஸென்ட் |
| ஜார்ஜ் | ஆன்று | பாட்ரிக் |
| இங்கிலந்து | ஸ்காத்லந்து | அயர்லந்து |



ஐக்கியக் கொடி (யூனியன் ஜாக்)

தில் இந்த மூன்று நாடுகளும் தனித்தனி ராஜ்யமாக இருந்தன. அப்போது, மூன்று நாட்டுக்கும் வெவ்வேறு கொடி இருந்தது. பிறகு 1707ஆ ஸ்காத்லந்தும் 1801ஆ அயர்லந்தும் அங்கில அரசாட்சியில் சேர்ந்துவிட்டன. அந்தக் காலத்தில் இந்த மூன்று ராஜ்யங்களின் கொடிகளையும் ஒன்று சேர்த்து, அதற்கு 'ஐக்கியக் கோடி' என்று பெயரிட்டனர். அந்தக் கொடியின் விவரமாவது :

(1) இது இங்கிலந்து தேசத்துக் கொடியின் அடையாளம். இதுவே ஜார்ஜ் (St. George) என்னும் அடியவரின் சிலுவையாம்.

(2) இது ஸ்காத்லந்து தேசத்துக் கொடியின் அடையாளம். இதுவே ஆன்று (St. Andrew) என்னும் அடியவரின் சிலுவையாம்.

(3) இது அயர்லந்து தேசத்துக் கொடியின் அடையாளம். இதுவே பாட்ரிக் (St. Patric) என்னும் அடியவரின் சிலுவையாம்.

மேலே கூறிய இந்த மூன்று கொடிகளும் சேர்ந்து ஆங்கில அரசாட்சியின் ஐக்கியக் கொடியாக விளங்குகிறது. இந்த ஐக்கியக கொடி நாட்டியிருக்கும் இடங்கள் எல்லாம் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டு, அவர்களுடைய ஆதரவில் விளங்குவது என்று நாம் கொள்ளவேண்டும்.

இந்த ஐக்கியக் கொடி ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்கவேண்டுவது அவசியம். ராஜாங்க சம்பந்தமான எல்லாக் கொண்டாட்டங்களிலும் நாம் ஐக்கியக் கொடியை அன்புடன் எற்று கௌரவிக்க

வேண்டும். இந்தக் கொடியை நமது கொற்றவராகவே பாவித்து, இதற்குப் பக்தி செலுத்திப் போற்றுவோமாக.

## 18. சிபாரிசு இல்லாத சிறுவன்

ஒரு நகரத்தில் பிரபு ஒருவர் இருந்தார். தம்முடைய வரவு செலவு கணக்குகளைப் பார்க்க லிகிதன் ஒருவன் வேண்டுமென்று அவ்வூர்ப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்திருந்தார். சுமார் ஐம்பதுபேர் அவ்வேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அவர்கள் அனைவரும் தம்மை வந்து காணும்படி அவர் தேதியும் காலமும் குறித்துத் தெரிவித்திருந்தார். குறித்த வேளையில், விண்ணப்பம் செய்தோர் அனைவரும் அவரைக் காண வந்தார்கள். அவர்களில் ஒருவன் தவிர மற்றெல்லோரும் நற்சாக்ஷிப்பத்திரங்களும் சிபாரிசுக் கடிதங்களும் கொண்டுவந்திருந்தார்கள். அந்தப் பிரபு வந்தவர்கள் எல்லோரையும் தனித்தனியே வரவழைத்து விசாரித்து, ஒவ்வொருவரையும் உற்றுக் கவனித்த பிறகு, அவனவன் கொண்டுவந்திருந்த நற்சாக்ஷிப் பத்திரங்களையும் சிபாரிசுக் கடிதங்களையும் படித்துப் பார்த்து அனுப்பிவிட்டார். கடைசியாகச் சிபாரிசுக் கடிதம் ஏதுமில்லாத இளைஞனை அழைத்து விசாரித்து அவனையே வேலைக்கு அமர்த்திக்கொண்டார்.

அந்தப் பிரபு வேலைக்கு வந்தவர்களில் ஒவ்வொருவனையும் விசாரிக்கும்போது அவருடைய நண்பர் ஒருவர் அருகில் அமர்ந்திருந்து நடந்தவைகளை நன்றாய்க் கவனித்துக்கொண்டிருந்தார்.

கடைசியாக, சிபாரிசு ஏதுமில்லாத சிறுவனுக்கு, அப்பிரபு அவ்வேலையைக் கொடுத்ததைக் கண்டு, அளவிறந்த ஆச்சரிய மடைந்து, 'ஐயா, அத்தனை பேர் சிறந்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் சிபாரிசுக் கடிதங்களும் கொண்டுவந் திருந்தும், அவர்களை யெல்லாம் அனுப்பிவிட்டு, ஒரு சிபாரிசும் இல்லாத இச்சிறுவனை நீர் கொண்டதற்குக் காரணம் யாது?' என்று கேட்டார்.



அதற்கு அந்தப் பிரபு, 'நண்பரே, இச்சிறுவன் ஒரு சிபாரிசும் கொண்டு வரவில்லை என்று சொல்லுவது சரியன்று; இவன் அநேக சிபாரிசுகள் அடைந் திருக்கிறான். அதிலும் இவன் கொண்டுவந்த சிபாரிசுகள் மற்றவர்கள் கொண்டு வந்த சிபாரிசுகளைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தவை' என்றார்.

எனினும், அப்பிரபுவின் நண்பர் அவரைப் பார்த்து, 'நண்பரே, இச் சிறுவன் ஒரு கடிதமும் தம்மிடம் கொடுக்கவில்லையே, நான் இங்கேதானே இருக்கிறேன், நடந்ததை எல்லாம் நன்றாய்க் கவனித்துக்கொண்டும் இருந்தேனே,' என்றார்.

அதற்குப் பிரபு, 'ஐயா, நீர் சொல்வது உண்மைதான். இச்சிறுவன் சிபாரிசுக் கடிதம் ஒன்றும் என்னிடம் கொடுக்கவில்லை என்பது உண்மையே. ஆயினும் அவன் தனது ஒழுக்கத்தால் மற்றவர்களைக் காட்டிலும் தானே சிறந்தவன் என்பதைத் தெரிவித்துக் கொண்டான். அதைக் காட்டிலும் வேறு சிபாரிசு என்ன வேண்டும்?' என்றார்.

'அப்படியா, அவனிடம் என்ன ஒழுக்கம் கண்டீர்?' என்று கேட்டார் நண்பர்.

அதற்குப் பிரபு, 'என்ன ஒழுக்கமா — முதலில் இச்சிறுவன் இந்த அறைக்குள் நுழையும் போதே தன் கால்களைச் சுத்தமாகத் துடைத்துக்கொண்டு வந்தான். கதவைத் திறந்து உள்ளே வந்ததும் முன்னிருந்தபடி அதை மூடினான். அதனால் இவன் சுத்தமுள்ளவன் என்பதும் ஜாக்கிரதை யுள்ளவன் என்பதும் விளங்கின' என்றார்.

நண்பர் சந்தோஷத்துடன், 'ஆம், அது உண்மைதான், நானும் பார்த்தேன், ஆனால் லிகிதன் வேலைக்கு இவையே முக்கிய குணங்களென்று நான் நினைக்கவில்லை; இன்னும் ஏதேனும் கவனித்தீரோ?' என்று கேட்டார்.

பிரபு, புன்சிரிப்புடன், 'ஐயா, இச்சிறுவன் வந்து பலகையின்மேல் உட்கார்ந்த சிறிது நேரத்துக்கெல்-

லாம் முடவன் ஒருவன் வந்தான். அவனுக்கு உட்கார இடமில்லை. அவன் இடமில்லாமல் திகைப்பதைக் கண்டு, இச்சிறுவன் எழுந்து தன்னிடத்தில் அவனை உட்காரச் செய்து உபசரித்தான்; மற்றவர்களில் ஒருவரும் அவ்வாறு செய்யவில்லை; அதனால் இச் சிறுவனுக்குப் பெரியோரிடத்தில் கௌரவமும் பிறர் வருத்தம் காணச் சகியாத இரக்கமும் உண்டென்பது தெளிவாயிற்று' என்றார்.

நண்பர், 'ஆம், அதையும் நான் கவனித்தேன். ஆனால் அதைப்பற்றி நான் அவ்வளவு விசேஷமாக எண்ணவில்லை' என்றார். பின்னும் பிரபு, 'நண்பரே, நான் கேட்ட வினாக்களுக்கு அவன் விடை கூறிய விதத்தைக் கவனித்தீரா? எவ்வளவு அமைதியாக, எவ்வளவு தெளிவாகக் கூறினான். அதனால் அவன் உண்மையே பேசுவோன் என்றும், கேட்ட விஷயத்திற்கு ஏற்ற விடை கூறும் திறமையுள்ளவன் என்றும் விளங்க வில்லையா?

'அன்றியும் நான் அவனிடம் பேசிக்கொண்டு இருக்கும்போது என் கையிலிருந்த புஸ்தகத்தைக் கீழே நழுவவிட்டேன். இச்சிறுவன் உடனே அந்தப் புஸ்தகத்தை எடுத்துத் தட்டித் துடைத்து மேஜையின்மேல் வைத்தான் ஆதலால் அவனுக்கு எதையும் ஒழுங்குபட வைக்கும் குணம் உண்டு என்பது வெளிப்பட்டது.

'இன்னும் இரண்டொரு விஷயங்கள் சொல்லுகிறேன் கேளும். மற்றவர்கள் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு நான் முன், நீ முன் என்று என்னிடம் வந்ததைப் பார்த்தீர் அல்லவா? இச்சிறுவன் அவ்வாறு செய்யாமல், தனக்குச் சமயம் வரும்

வரையில் பொறுமையுடன் காத்துக்கொண் டிருந்தான். அதனால் அவன் நிதான குணம் உள்ளவன் என்பதும் ஒழுங்காக நடந்துகொள்ளும் வழக்கம் உள்ளவன் என்பதும் ஏற்பட்டன. அவன் விழுந்த புஸ்தகத்தை எடுத்து மேஜைமேல் வைத்தபோது அவனுடைய கைகளையும் விரல்களையும் நன்றாய்க் கவனித்தேன். அவை மிகவும் சுத்தமா யிருந்ததுமன்றி, நகம் ஒழுங்காகச் சீவப்பெற்றும் இருக்கக் கண்டேன்.

'இவை யனைத்தும் நல்ல சிபார்சுக ளல்லவா? இவைகளைக் காட்டிலும் சிபாரிசு கடிதங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் சிறந்தவை யென்று எப்படிச் சொல்லக்கூடும்? என் கண்ணால் நான் கண்டறிந்து கொள்ளக்கூடிய நல்ல சிபாரிசுகள் இத்தனையிருக்க, வேறு சிபாரிசுக் கடிதங்கள் எனக்கு ஏன்?' என்று சொல்லி முடித்தார். நண்பர் அவைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்; ஆட்களை இவ்வாறே தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் தெரிந்து கொண்டார்.

## 19. இலைகள்

தாவரங்களுக்கெல்லாம் இலையுண்டு. பெரும்பாலும் இலைகள் எல்லாம் பசுமை நிறமாக இருக்கின்றன. தாவரங்களில் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு விதமான இலை இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா? சில இலைகளுக்கு விளிம்புகளும் வித்தியாசமாக ஏற்பட் டிருக்கின்றன. இவற்றை யெல்லாம் அடுத்த பக்கத்திலுள்ள படத்திற் பார்.



நாம் ஓர் இலையை எடுத்துப் பரிசோதித்தால், அதில் காம்பினின்றும் நீண்டிருக்கும் நடுநரம்பும் நடுநரம்பினின்றும் பிரிந்து செல்லும் பக்க நரம்புகளும் பக்க நரம்புகளினின்றும் பிரிந்துள்ள கிளை நரம்புகளும் சேர்ந்து ஒரு வலையைப்போல் இலையைச் சூழ்ந்துகொண்டு இருக்கின்றன. இவற்றுள் நடுநரம்பு இலையை நீட்டிப் பிடிக்கிறது. பக்க நரம்புகளும் அவற்றின் கிளை நரம்புகளும் இலையை அகற்றிப் பிடிக்கின்றன. இதனால் இலை நன்றாய் நீண்டு அகன்று அழகாய் விளங்குகின்றது. இலை ஏன் இப்படி இருக்க வேண்டும் ?

இலைகள் சூரியனுடைய ஒளியையும் உஷ்ணத்தையும் நாடுகின்றன. சூரிய உஷ்ணம் இல்லாவிட்டால் இலை நன்றாய் வளர்வதில்லை ஒரு மரத்தை உற்றுப் பார். அது எவ்வளவு அடர்ந்து தழைத்து வளர்ந்திருந்தாலும் ஒவ்வோர் இலையும் தனக்கு வேண்டிய சூரிய உஷ்ணத்தையும் காற்றையும் பெறத் தக்க விதமாக அமைந்திருக்கின்றது. இது வெகு ஆச்சரியகரமான விஷயமல்லவா ?

இனி, ஈர்க்கில் இலைகள் முளைத்திருக்கும் விதத்தைக் கவனி. சில ஜாதி யிலைகள் எதிரெதிராக இணைந்து முளைத் திருக்கின்றன ; சில, ஒன்றைவிட்டு ஒன்றாக மாறி மாறி முளைத் திருக்கின்றன. இலைகளால் மரத்திற்கு உண்டாகும் உபயோகம் என்ன என்பதை ஈண்டுக் கவனிப்போம்.

இலையில் நரம்புகள் ஓடியிருக்கும் இடம் தவிர மற்ற இடங்களில் கண்ணுக்குத் தெரியாத அணுப்பிரமாணமாக நுண்ணிய தொளைகள் நிரம்பி யிருக்கின்றன. பூதக் கண்ணாடியைக் கொண்டு பார்த்தால்

அந்தத் துவாரங்கள் நன்ருய்த் தெரியும். அந்தத் தொளைகளை இலையின் சுவாசக் குழைகள் என்று சொல்லலாம். ஏனென்ருல், இலைகள் இந்தத் தொளை-களின் மூலமாக ஆகாயத்தைச் சுவாசிக்கின்றன. இத் தொளைகள் ஒவ்வோர் இலையிலும் ஒரு சதுர அங்குலத்திற்கு 1,50,000 ஆக அமைந்திருக்கின்றன-வாம். பிராணிகள் பிராணவாயுவைச் சுவாசித்துக் கரியமிலவாயுவை வெளி விடுகின்றன. தாவரங்-களோ கரியமிலவாயுவைச் சுவாசித்துப் பிராண-வாயுவை வெளியிட்டுப் பிராணிகளுக்கு உதவி செய்-கின்றன. இது எவ்வளவு ஆச்சரியம்!

இலையிலுள்ள துவாரங்கள் மூக்கைப்போல சுவாசிப்பதற்கு உதவுகின்றன என்று மேலே சொன்-ளும். அந்தத் துவாரங்களால் மற்ெருரு காரியமும் நிகழ்கின்றது. அது என்னவெனில், வேர்கள் பூசாரத்தோடு நீரைக் கிரகித்து மரத்திற்கு உதவுகின்றன என்னும் விஷயத்தை நீங்கள் முன்பு வாசித்திருக்கிறீர்-கள். அந்த நீர் மரத்தின் மூலமாக நேரே இலைக்கு வருகிறது. இலை நீரிலுள்ள சாரத்தைக் கிரகித்துக்-கொண்ட பிறகு, நீர் மாத்திரம் வியர்வைநீர்போல் இலையிலுள்ள துவாரங்களின் வழியாக வெளிப்பட்டு, சூரிய உஷ்ணத்தினல் ஆவியாகப் பரிணமித்துப் போய்விடுகின்றது. வேரிலிருந்து வரும் தண்ணீர் இப்படிக் கழிந்து போகாவிட்டால், இலை மேலும் மேலும் புதிய பூசார நீரைக் கிரகிக்க முடியாமற் போய்விடும். இதனல் தாவரங்கள் தமக்கு வேண்டிய வாயுவைச் சுவாசிப்பதற்கும் கழிவடையான நீரைப் போக்குவதற்கும் இலைகள் இன்றியமையாத கருவிக-ளாக இருக்கின்றன என்பது விளங்குகிறது.

சாதாரணமாக எல்லா இலைகளுக்கும் மேற்புறம் வழுவழுப்பாகவும் அடிப்புறம் சொரசொரப்பாகவும் இருக்கின்றன. பூசனி முதலிய சிலவற்றின் இலை-களுக்கு மேற்புறம் சொரசொரப்பாக இருப்பதன் காரணம் யாது? சில இலைகளுக்கு அதிக உஷ்ணம் கூடாது. அப்படிப்பட்ட இலைகளில் அதிக உஷ்ணம் தாக்காதபடி இலையின் மேற்புறத்திலுள்ள சொர சொரப்பான இலைமுட்கள் அல்லது சுணைகள் நின்று தடுத்துக் காப்பாற்றுகின்றன. அதனால் அந்தச் சுணையை இலைக்கு ஏற்பட்டுள்ள மெல்லிய கவசம் என்று சொல்லலாம்.

மரம் தழைத்திருந்தால் நிழல் தருகின்றது. மரத்தின் நிழல் குளிர்ச்சியாக இருக்கிறது இதற்-குக் காரணம் யாது? மரத்தின் இலைகள் சூரிய உஷ்-ணம் கீழே விழாமல் தடுக்கின்றன. அதுவுமன்றி, இலையின் மேற்புறத்தில் கழிகிற நீர் ஆவியாகப் பரி-ணமிக்கிறதினுல், மரத்தை அடுத்துள்ள ஆகாயம் குளிர்ச்சியடைகின்றது. இதனுல் மரத்தின் நிழல் குளிர்ச்சியைத் தந்து, அதன் கீழ் தங்குவோருடைய தாபத்தை நீக்கி, இன்பத்தை விளைவிக்கின்றது.

## 20. குற்றத்தை ஒப்புக்கொண்ட குணவான்

அரசன் ஒருவன் தன் நாட்டில் நீதி தவறுமல் செங்-கோல் செலுத்திவந்தான். அவன் அடிக்கடி தனது நாட்டிலுள்ள வித்தியாசாலை, வைத்தியசாலை, சிறைச்-சாலை முதலிய இடங்களுக்குச் சென்று அவரவர்க-ளுக்கு நேரும் குறைவு நிறைவுகளை விசாரித்து, தக்க ஏற்பாடுகள் செய்வது வழக்கம்.

ஒரு நாள் அவ் வேந்தன் சிறைச்சாலைக்குள் சென்று பார்வையிட்டான். அங்கே கைதிகள் ஐவர் காலில் விலங்குடன் வேலை செய்துகொண்டிருக்கக் கண்டான். அப்போது அரசன் அவர்களை யணுகி, ஒவ்வொருவனையும் பார்த்து, 'அப்பா, நீ என்ன குற்றம் செய்ததற்காகத் தண்டனை அடைந்தாய்?' என்று வினவினான்.

அதற்கு முதலிலிருந்த குற்றவாளி அரசனை வணங்கி, 'ஐயனே, நான் யாதொரு குற்றமும் செய்ததில்லை. சாக்ஷிகள் எனக்கு விரோதிகள்; அவர்கள் என்மேல் வீண்பழி சுமத்தி, இந்த அநியாயமான தண்டனைக்கு ஆளாக்கினார்கள்,' என்றான்.

இரண்டாம் குற்றவாளி, 'அரசே, நியாயாதிபதி என்னை வேறொருவன் என்று எண்ணிக்கொண்டு அவன் செய்த குற்றத்திற்காக என்னைத் தண்டித்து விட்டார். உண்மையில் நான் யாதொரு குற்றமும் செய்தறியேன்', என்று முறையிட்டான்.

மூன்றாம் குற்றவாளி, 'பெருமானே, எனக்குத் தண்டனை விதித்தது முற்றிலும் அநியாயம். குற்றம் என்பதை நான் கனவிலும் நினைத்ததில்லை. நியாயாதிபதிக்கு என்மேல் நெடுங்காலமாக விரோதம் உண்டு. அதைப் பாராட்டி அவர் எனக்குத் தண்டனை விதித்து விட்டார்', என்று கூறினான்.

நான்காம் குற்றவாளி, 'ஆண்டவரே, ஏழைமீது இரக்கங்கொண்டு நான் சொல்வதைச் சிறிது செவி சாய்த்துக் கேட்கவேண்டும். நான் என்றும் எவ்விதக் குற்றமும் புரிந்ததில்லை. துஷ்டரைக் கண்டால் தூர விலகிவிடுவேன். நியாயாதிபதி என்னைப் பலர் கூடிய சபையில் நிறுத்தி அதிக கோபத்துடன்

கேள்விகள் கேட்டார். நான் பயந்து நாக்குக் குழறி ஒன்றுக்கு ஒன்றாகப் பிதற்றிவிட்டேன். எனது தடுமாற்றத்தைக் கண்டு அவர் என்னைக் குற்றவாளி என்று தீர்மானித்து, சிக்ஷை விதித்து விட்டார்', என்று உரைத்தான்.



ஐந்தாவது குற்றவாளிமாத்திரம் தலைகுனிந்து ஒன்றும் பேசாம லிருந்தான். அவனைப் பார்த்து அரசன், 'அப்பா, நீ ஏன் ஒன்றும் பேசாமல் சும்மா இருக்கிறாய்? உன் வரலாற்றைச் சொல்' என்று கேட்டான்.

அதற்கு அவன், 'ஐயனே, நான், சமுகத்துக்கு என் குற்றத்தை என்னென்று எடுத்துக் கூறுவேன்!

நான் எனது வறுமை காரணமாக அண்டைவீட்டுக்-காரனுடைய பொருளை அபகரித்தேன். அதனால் எனக்கு இக்கதி நேர்ந்தது' என்று கூறினான்.

அதைக் கேட்ட அரசன், 'அப்படியா, சரி, நீ பரமதுஷ்டன். இந்த நால்வரும் பரம யோக்கியர்-கள். இந்த யோக்கியர்களோடு அயோக்கியனாகிய நீ கூடியிருப்பது சரியன்று; இனி இங்கு நில்லாதே, தக்ஷணமே வெளியே போய்விடு', என்று விரைந்து கூறினான். பிறகு, சிறைச்சாலை அதிகாரியை அழை-த்து, ஐந்தாம் குற்றவாளியின் காலில் பூட்டியிருந்த விலங்கைக் கழற்றி, அவனைச் சிறையிலிருந்து விடு-விக்கும்படி உத்தரவு செய்தான்.

பிறகு, மன்னன் மற்ற நால்வரையும் பார்த்து, 'மூடர்களே, நீங்கள் குற்றம் செய்ததுமன்றி, அதை மறைக்கப் பொய்யும் பேசினீர்கள். குற்றம் செய்-தவன் அதை மறைக்கப் பொய் உரைப்பானானால் அது மற்றொரு குற்றமாக வளுக்கிறது. உங்களோடு இருந்தவன் உண்மை பேசியதனால் அவன் தான் செய்த குற்றத்துக்காக வருந்துகிறானென்பதும், அத-னால் அவன் இனிக் குற்றமொன்றும் செய்யமாட்-டானென்பதும் ஏற்பட்டன. நீங்கள் பொய்யுரைத்த-தனால் குற்றத்திலேயே நாட்டங் கொண்டிருக்கி-றீர்கள் என்பது வெளியாகிறது. ஆகையால், நீங்-கள் இந்தத் தண்டனையோடு மற்றொரு வருஷம் சிறையி லிருக்கவேண்டும்' என்று சொல்லிப் போய்-விட்டான். பொய்சொன்ன குற்றவாளிகள் குற்-றத்தை ஒப்புக்கொண் டிருந்தால் குணமடைந்து இருக்கலாமே என்று வருந்தினார்கள்.

## 21. பொறிகளும் புலன்களும்

'எண் ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்னும் உறுதியுரை உலகில் வழங்குகிறது. இதற்குக் காரணம் என்ன? அறிவுக்கு முக்கியஸ்தானம் மூளை. அந்த மூளை தலையில் அமைந்திருக்கின்றது. அதுவுமன்றி கண், காது, வாய், மூக்கு ஆகிய முக்கியமான உறுப்புக்களும் தலையில் அமைந்திருக்கின்றன. ஆகையால் உடம்பில் தலையே சிறந்த உறுப்பாக விளங்குகின்றது.

நாம் அரோக திடகாத்திரராக இருக்கும்போது நம்முடைய காரியங்களைச் செய்வதற்கு ஐந்து உறுப்புக்கள் அமைந்திருக்கின்றன. அவை, மெய் வாய் கண் மூக்கு செவி என்பனவாம். இந்த ஐந்திற்கும் ஐம்பொறிகள் என்று பெயர். இந்த ஐம்பொறிகள் செய்யும் காரியங்களுக்கு ஐம்புலன்கள் என்று பெயர். இனி, ஐம்பொறிகளைப் பற்றியும் ஐம்புலன்களைப் பற்றியும் இங்கே ஆராய்வோம்:

### 1. மெய்

மெய் என்பது உடல்; இது உச்சிமுதல் உள்ளங்கால்வரையிலுள்ள பூர்ண ரூபத்தைக் குறிக்கும். மெய்யின் தொழில் பரிச உணர்ச்சியாகும். இதற்குத் தொட்டறிதல் என்பது பொருள். மற்ற அறிவுகளைவிட இந்தப் பரிச வுணர்ச்சியே சிறந்தது. ஏனெனின், இது தேகமெங்கும் பர்வியிருக்கும் உணர்ச்சியாகும். கண் மூடிக்கொண் டிருந்தாலும், காது கேளாம லிருந்தாலும், மூக்கு முகரா திருந்தாலும், வாய் சுவைக்காம லிருந்தாலும் தேகம் மாத்திரம் பரிச வுணர்ச்சியாகிய தன் தொழிலைச் சதா செய்து-

கொண்டே யிருக்கிறது. எல்லாவற்றையும் மறந்து நித்திரை செய்கையில் ஒரு சிறு எறும்பு நம் உடலில் ஏறினாலும் அதைப் பரிச வுணர்ச்சியாகிய அறிவு உடனே உமக்குத் தெரிவித்து விடுகிறது. ஆகையால், பரிச வுணர்ச்சி மிகச் சிறந்ததாகும்.

## 2. வாய்

வாய் சுவை யறிவதற்குக் கருவியாயுள்ள உறுப்பு. இது முகத்தில் மூக்கிற்கும் மோவாய்க்கட்டைக்கும் இடையே குறுக்கில் அமைந்திருக்கிறது. வாய்க்கு வாயிற் கதவுகளாக மேல் உதடும் கீழ் உதடும் அமைந்திருக்கின்றன. வாய்க்குள் மேல் வாயின் ஓரத்தில் ஒரு வரிசைப் பற்களும் கீழ் வாயின் ஓரத்தில் ஒரு வரிசைப் பற்களும் ஒரு நாக்கும் இருக்கின்றன. இவை அனைத்தும் சேர்ந்து, உணவைத் தின்பதற்கும், சுவையை அறிவதற்கும், பேசுவதற்கும், சில சமயங்களில் மூக்கிற்குப் பதிலாகச் சுவாசிப்பதற்கும் உதவுகின்றன.

மேல்வாய் மண்டை ஓட்டோடு சேர்ந்து அசையாமல் இருக்கிறது. கீழ்வாய்மட்டும் காதண்டையிருக்கும் ஒரு தாளின் அனுகூலத்தால் மேலும் கீழும் அசையக்கூடியதாக அமைந்திருக்கிறது. தலைக்கூட்டில் இருக்கும் எலும்புகளில் கீழ்வாய் எலும்பு ஒன்றே அசையக் கூடியது.

பற்கள், உதடுகள் — ஒரு மனிதனுக்கு மேல் வாயில் பதினாறும் கீழ்வாயில் பதினாறும் ஆக முப்பத்திரண்டு பற்கள் உண்டு. பற்கள் ஈருக்குள் ஆழ்ந்து செல்கின்றன. ஆழ்ந்து செல்லும் அந்தப் பாகத்திற்கு பல்வேர் என்று பெயர். மரத்தின் வேரும்

நமது கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் செல்வது உனக்குத் தெரியும் அல்லவா? வாயிலுள்ள பற்களைக் கவனித்துப் பார். முன் பற்கள் தட்டையாகவும் முனை கருக்காகவும் இருக்கின்றன. எதையாவது கடிக்க வேண்டுமானால் முன் பற்களால் கடிக்கிறோம். அதனால் இந்த முன் பற்களுக்குக் கடிக்கும் பற்கள் என்று பெயர். கடைவாய்ப் பற்கள் அகன்று பருத்து இருக்கின்றன. அவை எதையும் மெல்ல உதவுகின்றன. அதனால் அவைகளுக்கு அரைக்கும் பற்கள் என்று பெயர். முன் பற்களுக்கும் கடைவாய்ப் பற்களுக்கும் இடையே, இரு புறங்களிலும், முனை கூரான ஒரு பல் இருக்கிறது. எதையாவது பிய்ப்பதற்கு அந்தப் பல் உபயோகப்படுகிறது. அதனால் அதற்குப் பிய்க்கும் பல் என்று பெயர். இது மாமிச பக்ஷணிகளான மிருகங்களுக்கு இருக்கும் கோரைப்பல்லுக்குச் சமமானது. உதடுகள், பற்கள் மெல்லும் பண்டங்கள் கீழே விழாதபடி தடுப்பதற்கு உதவும்.

நாக்கு — நாக்கு தசையினாலானது. இது அடியில் அகன்று முனையில் குவிந்து அரை வட்டமாக அமைந்து இருக்கிறது. அடி நாக்கு கீழ்வாயில் தொண்டையண்ணை ஒட்டிக்கொண்டு இருக்கிறது. நாம் நாக்கை வாய்க்கு வெளியே நீட்டவும் உள்ளே சுருக்கவும் கூடும். நாக்கே சுவையை அறிவதற்கான முக்கிய அவயவம். பண்டங்களைப் பற்கள் மெல்லும்போது, அவை நழுவிப் போகாமல், நாக்கு அப் பற்களின் புறமாகத் தள்ளிக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். பல், உதடு, அண்ணம், கீழ்வாய், மூக்கு முதலிய உறுப்புக்களின் உதவியால் நாக்கு பேசும் உறுப்பாக ஏற்பட்டிருக்கிறது.

## 3. கண்

கண் என்பது பார்வைக்குரிய உறுப்பு. கண் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் நன்றாய்ப் பார்க்கும்; ஆனால் தன்னைத் தான் பார்த்துக்-கொள்ள முடியாது. கண்ணில் சுற்றிலும் வெள்ளை விழியும் நடுவில் கருவிழியும் அமைந்திருக்கின்றன. கருவிழியைக் கவனித்துப் பார். அதில் ஓர் உருவம் தோன்றும். அதற்குப் பாவை என்று பெயர். இந்-தப் பாவை யில்லாவிட்டால் நேத்திரம் பழுது பட்ட-தாகும். 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை', ஆதலால் அதைக் காப்பாற்றக் கடவுள் ஏற்படுத்தி யிருக்கும் அமைப்பைக் கவனிப்போம்:

கண்வளை — கண் க்ஷேமமாக அமைந்திருப்ப தற்கு ஏற்பட்டிருக்கும் எலும்புக் கூட்டிற்குக் கண்-வளை என்று பெயர். மேற்புறத்தில் புருவ எலும்பும், கீழ்ப்புறத்திலும் காதின் புறத்திலும் கன்ன எலும்-பும், மூக்குப்புறத்தில் மூக்கெலும்பும் சூழ்ந்து கண்-வளையாக அமைந்திருக்கின்றன. இந்தக் கண்வளை-யின் உள்ளீடாகச் சுற்றிலும் அதிக மிருதுவான கொழுப்படை பொருந்தி யிருக்கிறது. அதனால் கண்-விழி மேலும் கீழும் பக்கங்களிலும் சுலபமாகச் சுழல்-கின்றது.

இமைகள் — கண்ணுக்கு மேலும் கீழும் அமைந்-திருக்கும் மூடிக்கு இமைகள் என்று பெயர். இவற்-றுள் மேலிமை பெரியது, கீழிமை சிறியது. மேலிமை அசையுந் தன்மையுள்ளது, கீழிமை நிலைத்-திருக்கும் தன்மை யுள்ளது. கண்ணில் ஏதேனும் தூசு விழும்போதும், தூங்கும்போதும் இமைகள் விழிகளை மூடிக்கொண்டு பாதுகாக்கின்றன. இமை-

யின் ஓரத்திலுள்ள மயிருக்குக் **கண்மயிர்** என்று பெயர். இந்தக் கண்மயிர் மிகவும் நுட்பமான அணுக்களும் கண்ணில் விழாதபடி தடுத்து விடுகின்றது; அதிக வெளிச்சம் கண்ணிற் பாயாமல் இருக்கும்படி காக்கிறது.

**கண்ணீர்** — கண்ணைச் சுற்றிலும் நீர்க்கால் உண்டு. கண் வறண்டுபோகாமல் அந்த நீர் காப்பாற்றுகிறது. அழும்போதும், அதிக ஆநந்தம் கொள்ளும்போதும் கண்ணில் தண்ணீர் வருவது உனக்குத் தெரியுமல்லவா?

**புருவம்** — புருவம் என்பது கண்ணுக்கு மேலே வில்வளைவாக மயிர் அடர்ந்திருக்கும் பாகம். அது, நெற்றியில் உண்டாகும் வியர்வை கண்ணில் விழாதபடி காத்து, கண்ணை ரக்ஷிக்கின்றது.

## 4. மூக்கு

மூக்கு புருவ மத்தியில் ஆரம்பித்து வாய்க்கு நேர்மேல் முடிகிறது. சுவாசிப்பதும் வாசனையறிவதும் மூக்கின் தொழில்களாம். மூக்கை நன்றாய் அழுத்திப் பார். இரண்டு கண்களுக்கும் இடையிலுள்ள பாகம் கடினமாகவும் அதற்குக் கீழுள்ள பாகம் மிருதுவாகவும் இருக்கின்றன. மூக்கின் இடையில் ஒரு தண்டு நின்று மூக்குத் தொளைகள் இரண்டாகச் செய்கின்றது. மூக்கின் மேற்பாகம் எலும்பினாலும் கீழ்ப்பாகம் முருந்தினாலும் இயன்றிருக்கிறது. முருந்து என்பது எலும்புமல்லாமல் தசையுமல்லாமல் நடுத்தரமாயுள்ள ஒருவகைக் குருத்து எலும்பாம். இது மடக்கினால் கொஞ்சம் துவண்டு வளைந்து, விட்டால் முன்னிருந்த நிலையை அடையுந் தன்மையுடையது. மூக்குத் தொளை முன்பு இரண்டாக

ஆரம்பித்து, நெடுகச் சென்று, மேல்வாயில் ஒன்றாக முடிந்து, குரல்வளையோடு சம்பந்தப்படுகிறது. மூக்கினால் ஆகாயத்தைச் சுவாசித்து எல்லா உயிர்களும் ஜீவிக்கின்றன. மூக்கு வாய்க்கு நேர்மேல் இருப்பதனால் அதிக நன்மை யுண்டு. கை உணவுப்பொருளை வாயண்டைக் கொண்டு வரும்போது, மூக்கு மேலே இருந்து வாசனை யறிந்து இது நல்லது, இது கெட்டது என்று நமக்குத் தெரிவிக்கிறது. இது பெரும் பயன் அல்லவா ?

## 5. செவி

செவி என்பது பக்கத்துக்கு ஒன்றாகக் கன்னக் கோடியில் இருக்கும் உறுப்பாம். இது ஓசையைக் கேட்டறிவதற்கு உபயோகமாகிறது. கண்ணால் பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடாத அநேக விஷயங்களைக் காதால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். 'யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே' என்னும் பழமொழியைக் கவனித்துப்பார். யானை பின்னே வருகிறதைக் கண் பார்த்துத் தெரிந்து-கொள்வதற்கு முன்னே, அதன் மணியோசையைக் காது கேட்டுத் தெரிந்துகொண்டு யானை வருவதை உணர்த்துகிறது. காது இல்லாவிட்டால் ஒருவர் பேசுவது மற்றொருவருக்குத் தெரியுமா — செவிடருக்குச் சங்கீதத்தினால் பயனுண்டா? குருடனும் செவிடனும் கூடி கூத்துப் பார்க்கப் போனார்கள். கூத்து முடிந்ததும் குருடன் பாட்டு நன்றா யிருந்தது என்றான்; செவிடன் கூத்து நன்றா யிருந்தது என்றான். அவர்கள், ஏன் அப்படிச் சொன்னார்கள். இந்தச் சங்கதியை நீயே தெரிந்து சொல்.

## 22. பூ காய் பழம்

நாம் ஒரு பூந்தோட்டத்தில் சென்றால் பலவகை மலர்களைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறு நிறமும் வெவ்வேறு மணமும் அமைந்திருக்கின்றன. மலரின் நிறங்கள் நேத்திரானந்தமாக விளங்குகின்றன. மணமோ மனோகரமாக இருக்கிறது. நமக்கு மலர்களால் உண்டாகும் பயனென்ன?

மலர்கள் மனிதருக்குப் பலவகையில் பயன்படுகின்றன. சுபம் அசுபம் ஆகிய இரண்டு காரியங்களுக்கும் மலர்கள் இன்றியமையாதவை. மானிடர் அலங்காரமாக மலர்களைச் சூட்டிக்கொள்ளுகிறார்கள். அவை, வாசனைத் திரவியங்கள் செய்ய உபயோகமாகின்றன. சில வகை நோய்களை மலர்கள் பரிகரிக்கின்றன.




1. புஷ்பகோசம்.
2. புஷ்பகோசத்தின் இதழ்கள். புல்லி அல்லது புறவிதழ்.
3. அகவிதழ்களின் அடி.
4. அல்லி அல்லது அகவிதழ்.
5. புருஷ நாளங்கள்.
8. புருஷ நாளங்களின் நடுவிலுள்ள ஸ்திரீ நாளம்.
6. கருப்பாசயம்.
7. கீலம்.
9. கீலாக்கிரம்.

இதோ இந்த மலரைக் கவனித்துப் பார். இந்த மலரின் அடிப்பாகத்தை, காம்போடு சேர்ந்த

கவசம் ஒன்று பற்றிக்கொண்டு இருக்கிறது. இந்தக் கவசம் இலையைப்போலவே பசுமை நிறமாக இருக்கிறது. இதற்குப் புஷ்பகோசம் என்று பெயர். இந்தப் புஷ்பகோசம் முனையில் சிறு இதழ்களாக விரிந்திருக்கின்றது. அவற்றிற்குப் புல்லி அல்லது புறவிதழ் என்று பெயர். இந்தப் புஷ்பகோசத்தின் அடியிலிருந்து பூவிதழ்கள் நீண்டு சென்று முனையில் மலர்கின்றன. இந்த இதழ்களுக்கு அல்லி அல்லது அகவிதழ் என்று பெயர். இந்த அகவிதழ்களுக்கு இடையே சில நாளங்கள் இருக்கின்றன. அவற்றைக் கவனித்துப் பார். இவற்றுள் ஒன்று நடுவில் இருக்க, சில அதைச் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றன. நடுவி லிருப்பது **ஸ்திரீ நாளம்**; அதைச் சூழ்ந்திருப்பவை **புருஷ நாளங்கள்.**

புருஷ நாளம் ஒவ்வொன்றின் உச்சியிலும் ஒரு பை யிருக்கிறது. அந்தப் பையில் **மகரந்தம்** என்னும் அணுக்கள் நிறைந்திருக்கின்றன. அந்த மகரந்தம் ஸ்திரீ நாளத்தின் உச்சியில் விழுந்தால், அது அடியில் சென்று கருக்கொண்டு காயாகிறது. இதுவே காயுண்டாவதற்குக் காரணம். அதை விவரித்துக் கூறுகிறேன் கேள்:

இதோ இந்த ஸ்திரீ நாளத்தைப் பார். இதற்குத் தலை இடை அடி ஆகிய மூன்று பாகங்கள் இருக்கின்றன. தலைப் பாகத்திற்குக் **கீலாக்கிரம்** என்றும், இடைப் பாகத்திற்குக் **கீலம்** என்றும், அடிப் பாகத்திற்குக் **கர்ப்ப கோசம்** என்றும் பெயர். கீலாக்கிரம் பிசின்போன்ற ஒருவகைப் பசையைக் கொண்டிருக்கிறது. புருஷ நாளத்திலுள்ள மகரந்தங்களில் ஒன்று கீலாக்கிரத்தில் விழுந்தவுடனே, கீலாக்கிரத்தின்

வாய் மூடிக்கொள்ளும். விழுந்த மகரந்தப்பொடி அதிவிரைவாகச் சென்று கர்ப்ப கோசத்தை அடையும். பிறகு அந்தக் கர்ப்ப கோசம் கருக்கொண்டு, காய்க்க ஆரம்பிக்கும்.

இனி, மகரந்தப் பொடி கிலாக்கிரத்தில் விழும் விதத்தைக் கூறுவோம். புருஷ நாளத்தின் உச்சியிலுள்ள பை வெடித்து மகரந்தம் பொடிப் பொடியாக உதிரும். அப்போது கிலாக்கிரம் ஓர் அணுவைத் தன் வசமாகக் கிரகித்துக்கொள்ளும். சில சமயங்களில் மலரிலுள்ள மதுவை உண்ண வரும் தேனீயாவது பட்டாம் பூச்சியாவது மலரில் தங்கும்போது, அங்குள்ள மகரந்தப் பொடி அந்த ஜந்துக்களின் கால்களில் ஒட்டிக்கொள்ளும். அவை அப்படியே கிலாக்கிரத்தில் உட்கார்ந்தால் அந்தப் பொடியைக் கிலாக்கிரம் பற்றிக்கொள்ளும். இவ்வகையில் தேனீயும் பட்டாம் பூச்சி வகைகளும் மலர்களுக்கு அதிக உபகாரிகளாக இருக்கின்றன.

மேலே கூறிய விதங்களினால் மலரிலுள்ள கர்ப்பகோசம் கருக்கொண்டு காய்க்கின்றது. காய்கள் நாளடைவில் முற்றி, வெப்பங்கொண்டு பழுக்க ஆரம்பிக்கின்றன. நன்றாய்ப் பழுத்த பழங்களிலுள்ள கொட்டைகள் பூமியில் விழுந்து செடிகளாக முளைக்கின்றன. சில செடிகளை மனிதர் பயிராக்கிக் காப்பாற்றுகிறார்கள். சில செடிகள் தாமாகவே முளைத்து விருத்தியாகின்றன.

## 23. பறவையும் பையனும்

பறவையென் றென்னைப் பழித்துப் பார்க்கும்
சிறுவனே யானும் சிறியதோர் பறவையே

உருவினும் சிறியேன் உணர்வினும் சிறியேன்
மருவிய உலக வாழ்வினும் சிறியேன்

காண்போர் கண்ணைக் கவருமோர் வனப்பும்
மாண்புறப் பெறுதவம் வாய்த்தே னில்லை

எனினும் இறைவன் என்னிடம் காட்டிய
கனிவு தனக்கோர் கரையும் உண்டோ

கடவுள் என்பால் காட்டிய அருளை
அடைவுடன் கூறுவேன் அன்புடன் கேளாய்

சிறியஎன் உடலின் சிறுமையை உன்னிச்
சிறகினால் ஓர்உடை சிறக்க அருளினன்

இவ்வுடை ஒன்றே எப்பரு வத்தினும்
செவ்விய உடையாச் சிறந்து விளங்குறும்

இயற்கை அழகே எவர்க்கும் அழகாம்
செயற்கை அழகாற் சிறப்பும் உண்டோ

நின்னைப் போல்நான் நிலத்தில் இறங்குவேன்
என்னைப் போல்நீ வானிலே றுவையோ

என்னொரு நாளெலாம் இன்புறு நாளே
அன்பின் சிறப்பை அறிந்தவன் யானே

என்ன எவரும் இசைத்திட வாழ்வேன்
இன்னும் எனக்கிங் கின்னலும் உண்டோ

அன்றன் றிறைவன் அன்புட னளித்ததை
அன்றன் றுண்பேன் அகமகிழ்ந் திருப்பேன்

இன்றென் செய்வது நாளையென் செய்வதிங்
கென்றே வருந்தும் இயல்பெனக் கில்லையே

செல்வச் சிறுவ இவ்விதச் செல்வம்
நல்மெய்ஞ் ஞானியர் நாடினும் கிடைத்தல்

அருமையே யென்ன அறிவுள மாந்தர்
பெருமையா வுமக்குட் பேசுவ துண்மையோ
யானிங் கதனை யறிய
ஊன மின்றி உரைத்திடு வாயே.

## 24. காகம் பாம்பைக் கொன்றது

கோடுறு சினையில் காகம்
கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
கதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி,

தன்னுயிர்ப் பாங்க னான
சம்புகன் அருகு போயிங்
கென்னசெய் குவனுன் என்ன
'இதைக்கொலல் அரிதோ நீபோய்
மன்னவன் தேவி ஆடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்அணி கொண்டு வந்து
போடுக பொந்தில்' என்ன,

காகமப் படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
ஈர்ந்தனர் ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற
நறுக்கினர் இருதுண் டாக
ஆகையால் உபாயத் தாகா
தருஞ்செய லில்லை யம்மா.

## 25. அன்னைதன் அன்பு

ஆரபி ராகம்] அகவல் [ஆதி தாளம்

1. அன்னா யுன்றன் அன்பினை யுன்னில்
என்னென் றுரைப்பேன் என்னென் றுரைப்பேன்

2. அறம்பல புரிந்தாய் ஆர்வமோ டகட்டில்
திறம்பட ஐயிரு திங்களுஞ் சுமந்தாய்

3. மெய்யும் வருந்தினை விழைவுடன் ஈன்றாய்
பைய வெனவே பரிந்தங் கெடுத்தாய்

4. வருத்த மனைத்தும் மறந்தனை யுடலைத்
திருத்தினை சீருஞ் செய்தனை மரபால்

5. பாலு மூட்டிப் பக்கலி லிருத்தி யெக்
காலு மார்பினுங் கையினுந் தோளினும்

6. சேர்த்துத் தொட்டிலிற் சிறக்கவே யாட்டியும்
பார்த்தே களிக்கப் பல்பொருள் இழைத்தும்

7. ஈயெறும் பணுகா தெவ்வெப் போதும்
சேயெனு முரிமையிற் சிறைகாத் தோம்பினை

8. தேனே யமுதமே செல்வக் கிளியே
கோனே யென்னக் குலவிழுத் தாடினை

9. புன்சொல் கேட்டே புந்தி மகிழ்ந்தனை
இன்சொல் லிதனினும் எங்குண் டென்றனை

10. தளர்நடை கண்டாய் சாற்றரு மனத்தில்
கிளர்ச்சியே கொண்டாய் கேடில்சீ ரன்னாய்

11. நான்நோய் கொண்டேன் நைந்தனை நீயே
ஆனபல் மருந்தும் அருந்தினை யென்னே

12. குற்றம் பலவுங் குணமாக் கொண்டனை
மற்றவு மென்னால் வழுத்தவும் படுமோ

13. அன்னா யுன்றன் அன்பினை யுன்னில்
என்னென் றுரைப்பேன் என்னென் றுரைப்பேன்.

## 26. மானிட வாழ்க்கை

1. பெற்றோர்க ளீட்டிய பெரும் பொருளைக்கொண்டு
பெருமையாய் வாழ்ந்திட்ட பேதை பொருவன்

2. தேடா தழித்திடில் பாடாக முடியுமெனும்
சீரிய வார்த்தையுந் தேர்ந் திடாமல்

3. இப்பொரு ளென்றுமே மெய்ப்பொரு ளாகுமென்
றிருந்தன னோர்தொழிலு மில்ல னாக

4. வளவனே யாயினும் அளவறிந் துண்கவெனும்
மன்னுமேன் மொழியையும் மனத்தி லுன்னன்

5. ஆனதோர் முதலினும் அதிகமே செலவாக்கி
ஆயினன் வறுமைநோய்க் காள தாக

6. வறுமையால் மேனியும் வாடியே வனப்பற்று
வஞ்சகம் பொய்முதல் மருவி னானே

7. இல்லானை யெல்லாரும் எள்ளுவ ரென்பபோல்
இல்லாளும் வேண்டிடா திகழ்வ தானாள்

8. மக்களோர் புறமழ மனைவியோர் புறமழ
மாருதப் பஞ்சென்ன மன முளைந்து

9. நாட்டினில் வாழ்க்கையை நஞ்செனக் கொண்டனன்
காட்டினில் வாழ்க்கையைக் கருதி னானே

10. ஐங்காத மேகினுந் தன்பாவம் தன்னுடன்
ஆகுமா மென்பதை யறிந்தி லானே

11. கானகத் துற்றனன் கரந்தனன் ஒருபுறம்
களிறொன்று தொடர்ந்ததே கடுஞ் சினத்தால்

12. ஓடினான் வழியினில் உற்றதோர் கேணியில்
உணர்வின்றி வீழ்ந்தனன் உடல் நடுங்கி

13. கரையினில் சேர்ந்திடக் கருதினு னங்கொரு
கருநாக மூஞ்சீறி கடுகி வரலும்

14. என்செய்வே னென்செய்வேன் என் விதிக் கென்னவே
ஏங்கிமேல் நோக்கினான் இன்ப முற்றான்

15. கேணியின் நடுவினில் கிளையொன்று நான்றிடக்
கிளர்ச்சியால் தாவினான் கிட்டி யதனை

16. பற்றியே நான்றுதன் பயமகன் றனைதைப்
பற்களா லோரெலி படப டெனவே

17. கடித்திட நோக்கினான் கலங்கினான் மலங்கினான்
கதியிதோ டறுதியாக் கருதி னானே

18. பட்டதோர் காலிலே பட்டிடு மாறுபோல்
கெட்டதோர் குடியதே கெட்டு வருமே

19. சென்றதை யுன்னியே சிந்தையும் நொந்தனன்
சென்றிடுங் காலமே சேர்ந்த தென்று

20. அங்காந்த வாயுடன் ஆகாய நோக்கினான்
அம்மரத் துச்சியில் அமைந்த கூட்டின்

21. தேனிலோர் துளிவிழச் சிந்தையிற் களிகொண்டு
தீர்ந்தனன் துக்கமும் சிற்ற றிவினால்

22. மரமுறிந் தன்னவன் வாவியில் வீழ்ந்துபின்
மாண்டனன் அன்புள்ள மக்க ளேநீர்

23. மானிடப் பிறவியில் மன்னுமின் பங்களும்
ஆனதுன் பங்களும் அறிய லாமே.

ஔவையார் அருளிச்செய்த

## 27. வாக்குண்டாம்

1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மே லெழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர். (2)

3. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (3)

4. அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. (4)

5. உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ — கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். (5)

6. நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம். (6)

7. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பது வும்நன்றே — நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. (7)

8. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பது வுந்தீதே — தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. (8)

9. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (9)

10. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். (10)

11. மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்கவேண்டா — கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். (11)

12. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (12)

13. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (13)

14. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல் — பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். (14)

15. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. (15)

16. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு. (16)

17. சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் — சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

18. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ்சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம். (18)

19. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. (19)

20. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையும் காப்ப ரறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். (20)

ஔவையார் அருளிச்செய்த

## 28. நல்வழி

1. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெதிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. (21)

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. (22)

3. ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். (23)

4. ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் — ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. (24)

5. பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்டமானிடரே கேளுங்கள்—கூடுவிட்டே
ஆவிதான் போனபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். (25)

6. ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு. (26)

7. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல். (27)

## 29. நீதிவெண்பா

1. தாமரை பொன்முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா — தாமழன்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென். (28)

2. பகைசேரு மெண்ணன்கு பற்கொண்டே நன்னு
வகைசேர் சுவையருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித் தவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில். (29)

3. ஈக்கு விடந்தலையி லெய்தும்இருந் தேளுக்கு
வாய்த்தவிடம் கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (30)

4. கொம்புள தற்கைந்து குதிரைக்குப் பத்தீமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே — வம்பு
தீங்கினர் தம் கண்ணில் தெரியாத தூரத்து[செறி
நீங்குவதே நல்ல நெறி. (31)

5. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு — பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். (32)

83395

Printed at the 'Caxton Press,' Madras — 1918.

201
103 04/8)

# வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

## பாட புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| முதல் பாட புத்தகம் ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் பாட புத்தகம் ... | 0 | 3 | 0 |
| மூன்றாம் பாட புத்தகம் ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் பாட புத்தகம் ... ... | 0 | 5 | 0 |
| ஐந்தாம் பாட புத்தகம் ... ... | 0 | 6 | 0 |
| ஆறாம் பாட புத்தகம் ... ... | 0 | 6 | 0 |
| ஏழாம் பாட புத்தகம் ... ... | 0 | 6 | 0 |
| எட்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 8 | 0 |
| ஒன்பதாம் பாட புத்தகம் ... ... | 0 | 8 | 0 |

## திராவிட வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| திராவிட பாலபாடம் ... ... | 0 | 1 | 6 |
| முதல் திராவிட வாசகம் ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் திராவிட வாசகம் ... ... | 0 | 3 | 0 |
| மூன்றாம் திராவிட வாசகம் ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் திராவிட வாசகம் ... ... | 0 | 5 | 0 |

## நூதன வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| நூதன முதல் வாசக புஸ்தகம் ... ... | 0 | 2 | 6 |
| நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ... | 0 | 3 | 0 |
| நூதன மூன்றாம் வாசக புஸ்தகம் ... | 0 | 4 | 0 |
| நூதன நான்காம் வாசக புஸ்தகம் .. | 0 | 5 | 0 |

## கணித புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| புதுச் சட்டக் கணிதம் 4 ஆம் வகுப்பு ... | 0 | 6 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 3 ஆம் வகுப்பு ... | 0 | 4 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 1-2 ஆம் வகுப்பு ... | 0 | 2 | 0 |

புத்தக வியாபாரிகள், 35, சின்னதம்பித் தெரு, சென்னை.